விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது+ VIII — Valampurii

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 05 வியாழக்கிழமை (20.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 001

ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தொடரும் சீரற்ற காலநிலை; வடக்கில் கடும் மழை அபாயம்!

## நேற்றுவரை 2 இலட்சம் பேர் பாதிப்பு

நாட்டின் பல பாகங்களிலும் கடந்த இரண்டு தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இதுவரையில் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 14 பேர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவித்துள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 558 பேர் இதனால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் வடக்கு கிழக்கு உள்ளிட்ட சில மாகாணங்களில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்யும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## 43ஐ எட்டியது கைது முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின ரால் (ரி.ஐ.டி) கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நேற்று நான்கு முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்திற்கு கிடைக்கப் (19ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 2 மாணவிகள் விசாரணைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவிகள் மேலும் இருவர் பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலி ஸாரினால் விசாரணைக்கு வருமாறு அழைக் கப்பட்டுள்ளனர்.

இதனை யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தரும் உறுதிப்படுத்தினார்.

யாழ்.பல்கலைக் (20ஆம் பக்கம் பார்க்க)




## சொல்வதெல்லாம் உண்மை நாளை உலகம் அழியாது

### 29-ம் திகதி இலங்கையில் பூமியதிர்வு!

(கொழும்பு)

உலகத்தின் அழிவு 2012-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம், 22-ம் திகதிகளில் ஏற் படும் என கூறிவருகின்ற போதிலும் இதில் எவ்விதமான உண்மையும் கிடையாது என புவியியலாளர் லலித் விஜயவர்த்தன தெரி வித்துள்ளார்.

மேலும் விஞ்ஞானியும் புவியியலாளரு மான லலித் விஜயவர்த்தன தெரிவிக்கையில்,

2012-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி அதாவது டிசம்பர் மாத இறுதி சனிக் கிழமை அன்று மத்திய நிலையிலான பூமி அதிர்ச்சி ஒன்று இலங்கையில் ஏற்படும்.

இதன் தாக்கம் இந்தியாவிற்கும் காணப் படும் எனவும் தெரிவித்துள்ளார்.

2019-ம் ஆண்டு (19ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப்பிரேரணையை அரசு வாபஸ் பெறாது

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விற்கு எதிரான குற்றப்பிரேரணையை வாபஸ் பெற்றுக் கொள்ளமுடியாது என பிரதி சபா நாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

குற்றப்பிரேரணை வாபஸ்பெற்றுக்கொள்ள அரசியல் அமைப்பில் இடமில்லை. குற்றப் பிரேரணை தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக் குழு அறிக்கை ஏற்கெனவே நாடாளுமன் றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பின் (19ஆம் பக்கம்)

## இந்திய-இலங்கை இராணுவத் தளபதிகள் சந்திப்பு

(கொழும்பு)

இந்திய இராணுவ அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் பிக்ரம் சிங் தலைமையிலான சிரேஷ்ட இந்திய இராணுவ அதிகாரிகள் அடங்கிய தூதுக்குழு, 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று புதன்கிழமை இலங்கை வந்தடைந்தது.

இந்நிலையில் இந்திய இராணுவத் தளபதிக்கும் இலங்கை இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கும் (19ஆம் பக்கம் பார்க்க)


பிக்ரம் சிங் — ஜெயசூரிய

## தெரிவுக் குழுவுக்கு எதிராக ஷிராணி வழக்குத் தாக்கல்

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றஞ்சாட்டி பதவியிறக்கும் பிரேர ணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை இரத்துச் செய்யுமாறு கோரி பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, புதனன்று இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக சபாநாயகரும் மற்றும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் உறுப்பினர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தெரிவுக்குழு விசாரணையின்போது நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினர் நியாயமான வகையில் விசாரணையை நடத்தவில்லை என்று ஷிராணி மனுவில் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளும் ஜேவிபியும் ஆயுதம் ஏந்தியவர்களே!

### - மனோ கணேசன்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி என்றஜே.வி.பியும், தமிழீழவிடுதலைப் புலிகளும் இந்நாட்டின் சட்டபூர்வ அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் தூக்கினார்கள் என ஜனநாயக மக் கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பிரித்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற தொனிப் பொருளில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மா நாட்டில் உரையாற்றியபோதே மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விடுதலைப்புலிகள் வட கிழக் கில் தனி ஒரு நாட்டை உருவாக்க முனைந்தார்கள். சிங்கள ஜே.வி. பியும் முழுநாட்டையும் கைப்பற்ற முனைந்தார்கள். இரு சாராருமே ஆயுதம் தூக்கியவர்கள்தான். இரு சாராருமே ஆட்சியை முழுதாகவோ, பகுதியாகவோ பிடிக்க ஆயுதம் தூக் கிப் போராடியவர்கள்தான்.

புலிகள் வட கிழக்கில் குறிப்பிட்ட பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டு ஆட்சியில் வைத்திருந்ததைப் போல், ஜே.வி.பி (19ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி யாழில் நாளை அடையாள உண்ணாவிரதம்!

### கூட்டமைப்பு தெரிவிப்பு

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல் கலைக்கழக மாணவர்கள் நான்கு பேரின் விடுதலை உள்ளிட்ட 5 கோரிக்கையை முன்வைத்து நாளை நடத்தப்படவுள்ள அடையாள உண் ணாவிரதப் போராட்டம் திட்டமிட்டபடி இடம்பெறும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நாளை வெள்ளிக்கிழமை 21ஆம் திகதி காலை 7 மணி தொடக் கம் மாலை 4.30 மணிவரை தந்தை செல்வா சதுக்கத்தில் இந்த அடை யாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

- கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலை
- விசாரணைகள் இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை.
- காணாமல்போனவர்களின் உண்மை நிலையையும் அவர்கள் தொடர்பான விபரங்களையும் பகிரங்கப்படுத்தல்.
- கடந்த சில வாரங்களாக யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் மேற்கொள்ள ப்பட்டு வரும் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் முன்னாள் போரா ளிகளை (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம் 09 09 1953 | மறைவு 21 11 2012



திருமதி
## சின்னத்தம்பி இந்திராணி (முத்தக்கா)

பாசமழை பொழிந்து பாரினில் எமை வளர்த்தீர்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு. சென்றீர்கள்
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும் ஆத்மா சாந்திக்காய்

21.11.2012 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்திகேட்டு நேரிலும், தொலை பேசி மூலமும் ஆறுதல் கூறி சகல வகையிலும் எமக்கு உதவிகள் செய்து எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (21.12.2012) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் சபீண்டிகரண கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டி (1196) தகவல் : குடும்பத்தினர்

# மாணவர்களை விடுவிக்கும் வரை கற்றல் செயற்பாடு சாத்தியமற்றது

## யாழ்.பல்கலை விரிவுரையாளர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகிய மாணவர்களினை விடுவிக்கும் வரையில் யாழ். பல் கலையில் கற்றல் செயற்பாடு என்பது சாத்தியமற்றது.

அவ்வாறு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அது மாணவர்களின் விடுதலையில் பலவீனத்தையும் காலதாமதத்தினையும் ஏற்படுத்தும் என யாழ்.பல்கலைக்கழகவிரிவுரையாளர்கள் தெரிவித்தனர்.

நாம் இதனையே ஜனாதிபதிக்கும், கல்வி அமைச்சருக்கும் கடிதம் மூலம் தெரிவித்திருந்தோம் எனவும் அவர்கள் கூறினர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு இரு வாரங்களாகியுள்ள நிலையில் பல்கலைச் செயற்பாடுகளும் செயலிழந்துள்ளன.

பல்கலைச்செயற்பாடுகளினை மீள ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சித்து வருகின்ற போதிலும் கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்படும் வரையில் அது சாத்தியமற்றது.

தற்போது யாழ். பல் கலைக்கழகம் செயலிழந்து காணப்படுகின்ற மையால் கைது செய்யப் பட்டுள்ளமாணவர்களின் நினைப்பு எம் அனைவரிடமும்உண்டு.அதுவே மாணவர்களின் விடுதலையைநோக்கி எம்மை பயணிக்கச் செய்யும். ஆனால் பல்கலைக்கழக செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டால் மாணவர்கள் பற்றிய நினைப்பினை அனைவரும்மறந்து விடுவர். இதனால் மாணவர்களின் விடுதலையில் தாமதம் ஏற்படவும் சந்தர்ப்பம் உண்டு.

இக்கருத்தினையே மாணவ பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத்தினருடனான நேற்றைய சந்திப்பின் போதும் மாணவர்கள்சுட்டிக்காட்டியிருந்தனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது மாணவர்கள் காலவரையறையற்ற வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களினை நாம் விரிவுரைகளுக்குச் சமுகம் அளிக்குமாறு கூற முடியாது.

அவ்வாறு நாம் மாணவர்களினை அழைத்தாலும் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவும் மாட்டார்கள்.

எது எப்படியாயினும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் நிலைப்பாடு கைது செய்யப்பட்ட மாணவர்களின் விடுதலைதுரிதப்படுத்தப்பட வேண்டும்.

மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தும் சந்திப்புக்களில் நம் பங்கேற்கத்தயார் எனினும் கல்விச்சமூகம்தொடர்ச்சியாக இராணுவத்துடன் சந்திப்புக்களை மேற்கொள்வது சரியானதொன்றல்ல.

பாதுகாப்புஅமைச்சரினால்முடியாதகாரியத்தினை இராணுவத் தளபதி சாதிக்கப் போவதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட மாணவர்களினை விடுவிப்பதற்கு தாம் தொடர்ந்தும் சந்திப்புக்களை மேற்கொள்ளத்தயார் எனவும் பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் விடுதலை தொடர்பில் தொடர்ந்தும் பாடுபடும் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் முன்னரே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-4)


## கார் வாடகைக்கு தேவை

தனியார் கம்பனியின் உதவி முகாமையாளரின் பாவனைக் காகமாதவாடகை அடிப்படையில் கார் தேவை. (1195)

T.P. : 0725931515



## செல்லா சினிமா யாழ்ப்பாணம்




விஜய், காஜல் அகர்வால் மற்றும் பலர் நடிப்பில்

10.30, 2.30, 6.30, 9.30



WESTERN UNION MONEY TRANSFER

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன் கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், உடுபுடைவைகள், CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்

(சி-1719)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.No:-0212225392


# ஈழத்து சிதம்பரத்தில் திருவெம்பாவை காண வாரீர்...



தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்பவனை
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பவனை
கங்கைத் தலையானை கருநீலம் உண்டவனை
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தவனை
பற்றெல்லாம் விட்டுப் பரதேசி ஆனவனை
கற்றைச் சடையானைக் கைலாய மலையானை
ஈழத்து சிதம்பரத்து சௌந்தராம்பிகை சுந்தரேசனை
நீள நினைத்து வாழவழிகேட்டு பாடி வாழ்வோமே

- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

(C-1813)

இன்று (20-12-2012) ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை 2ஆவது உற்சவம்


## நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....

| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
| --- | --- |
| லண்டன் | 1500/- |
| கனடா | 2600/- |
| சுவிஸ் | 1200/- |
| அவுஸ்திரேலியா | 1000/- |
| ஜேர்மனி | 1000/- |



சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்
லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!
3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (சி-1818)

மேலதிக தொடர்புகளுக்கு:
Rain Bow Travels
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0212219596


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

# மனித குலத்திற்கான புதிய யுகத்தின் பிறப்பு



ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ

ஸ்ரீ அம்மா பகவானிடமிருந்து நேரடியாக விழிப்புணர்விற்கான ஆசிகளைப் பெறுவதற்கும் தியானத்திற்குமான விஷேட WEBCAST தரிசனம் 21.12.2012 வெள்ளிக்கிழமை பி.ப. 5 மணி

ஒவ்வொரு முடிவும் இன்னொன்றின் ஆரம்பமாகும். மனித குலத்தின் சரித்திரத்தில் ஏற்படும் மாபெரும் மாற்றத்திற்கு நாமே சாட்சி

## ஒரு யுகத்திலிருந்து இன்னொரு யுகத்திற்கு மாற்றம்

மனித குலம் அதிவேகத்துடன் ஒரு புதிய உலக உருவாக்கத்தை நோக்கி முனைப்புடன் சென்று கொண்டிருக்கின்றது. மனித இனத்தின் புதிய யுகத்தின் தோற்றத்தை கொண்டாடி அங்குரார்ப்பணத்தை செய்வதற்கும் ஸ்ரீ அம்மா பகவானுடன் தியானத்தை மேற்கொண்டு ஆசியைப் பெறும்வண்ணம் WEBCAST தரிசனம் நடைபெறவுள்ளது.

இடம் :- திவ்ஜ ஜீவன சங்க மண்டபம், சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர்.
காலம் :- 21.12.2012 வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

நிகழ்வுகள்
- ஆராத்தி மூலமந்ரம், பஜன்
- மூச்சு பயிற்சி
- வாழ்க்கையின் நிகழ்வுகளை மீட்டல்
- ஸ்ரீ அம்மா பகவான் நாம ஜபம்
- ஸ்ரீ அம்மா பகவான் முன்னிலையில் முக்திக்கான தியானம் (WEBCAST) பி.ப. 5 மணி
- மௌனப் பிரார்த்தனை
- சவாசனம்
- தீக்ஷை
- பஜன், நன்றி, ஆராத்தி

பக்தர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து அருளாசி பெறும் வண்ணம் அழைக்கப்படுகின்றீர்.

நன்றி

ஸ்ரீ அம்மா பகவான் சத் சங்கங்களின் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

K.பத்மநாதன்
45, அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்.
Mobile : [illegible]
(1191)

# மரண அறிவித்தல்

அம்பலவன் பொக்கணை இடைக்காட்டை நிரந்தர முகவரியாகக் கொண்ட **கணபதிப்பிள்ளை செல்லமுத்து** அவர்கள் 19.12.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மகேஸ்வரி காலஞ்சென்ற செல்லநாச்சி மற்றும் செல்லச்சரஸ்வதி, பூபதி, கணிதம்மா, மல்லிகாதேவி, யோகராணி, தவமலர், பாசமலர் (லண்டன்) தவரட்ணம் (வெள்ளை திருமகள் அழகுச்சோலை புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும்,

நாகராசா, காலஞ்சென்ற கந்தையா மற்றும் ஸ்கந்த புஸ்பகரன், சுந்தரலிங்கம், பரதனாலிங்கம், விக்னேஸ்வரன் நவரத்தினம், குணசிங்கம் (லண்டன்) ஸ்ரீரஜனி (ஆசிரியை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று 20.12.2012 காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மாத்தளன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, முல்லைத்தீவு. (சி-1820)

தவரட்ணம் (வெள்ளை)
திருமகள் அழகுச்சோலை,
புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
    1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
    2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.



பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711 மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன்

"பார்த்தசாரதி" என்றால் என்ன அர்த்தம்?

பார்த்தனுக்கு சாரதி. அதாவது, ''அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன்'' என்ற பொருளில் 'பார்த்த சாரதி' என்ற சொல் வழுங்கப்படுகிறது.

கண்ணன் அர்ஜுனனுக்கு இரண்டாவது பார்த்தசாரதி.

அப்படியென்றால், ''முதல் பார்த்தசாரதி'' என்று ஒருவர் உண்டா?

உண்டு!

கண்ணனுக்கு முன்னாலேயே அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியவன் ஒருவன் இருக்கிறான்.

அவன் பெயர் உத்தரகுமாரன்.

அவன் விராட தேசத்தின் இளவரசன். அப்போது பாண்டவர்கள் அக்ஞாத வாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

'பாண்டவர்கள் விராட தேசத்தில்தான் இருப்பார்கள்!' என்று துரியோதனன் ஊகிக்கிறான்.

அவர்களை வெளிப்படுத்துவதற்காக அவன் சில முயற்சிகளைச் செய்கிறான்.

தனது சேனைகளையெல்லாம் துரியோதனன் அழைத்துக் கொண்டு விராட நாட்டிலுள்ள பசுக்களையெல்லாம் ஓட்டிக் கொண்டு போகிறான்.

அந்த நேரத்தில் விராடன் வேறு ஒரு திசையில் போர் செய்வதற்குச் சென்றிருந்தான். அவனுடைய மகன் உத்தரகுமாரன்- பயந்தாங்கொள்ளி!

அவன் கத்தியைப் பார்த்தாலே மிகவும் பயப்படுவான். அவன் எங்கே, எப்படி சண்டை பிடிப்பான்?

இருந்தாலும் அவனுக்கு இப்போது வேறு வழியில்லை. அப்பா ஒரு பக்கம் போயிருக்கிறார். இவன் இன்னொரு போர் முனைக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறான்.

இந்தச் சமயத்தில் அங்கிருந்த அர்ஜுனன் உத்தரகுமாரனுக்கு உதவி செய்ய வருகிறான்.

எப்படி?

அதாவது பேடி உருவத்தில் இருக்கும் அர்ஜுனன், உத்தரகுமாரனுக்கு சாரதியாக அமைகிறான்.

போர்முனைக்குப் போய்ச் சேர்ந்ததும் உத்தரகுமாரன் தேர் ஓட்டுகிறான். அர்ஜுனன் கௌரவ சேனைகளை விரட்டியடிக்கிறான். அதனால் கௌரவர்கள் அனைவரும் புறமுதுகிட்டு ஓடிப்போகிறார்கள்.

அதன்பின் ஊருக்குத் திரும்பும் போது... அர்ஜுனன் மறுபடியும் 'பேடி உருவம் எடுத்துக்கொண்டு தேர் ஓட்டிக்கொண்டு வருகிறான். அப்போது உத்தரகுமாரன் தேரில் உட்கார்ந்திருக்கிறான்.

பார்க்கிறவர்கள் அனைவரும், 'உத்தரகுமாரன்தான் கௌரவர்களை முறியடித்து விட்டு வருகிறான்!' என்று நினைத்து அவனைப் பாராட்டுகிறார்கள்.

அர்ஜுனனும், "நான் சண்டை போட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். இந்த இரகசியம் நமக்குள் இருக்கட்டும்" என்று உத்தரகுமாரனிடம் கூறி விடுகிறான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்கும் உத்தரகுமாரனுக்கு ''போரில் வெற்றி பெற்றான்!'' என்ற பேரும் புகழும் எப்படி வந்தது?

"அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை" என்று ஓர் ஆன்மீகப் பேச்சாளர் கூறினார்.

'ஸ்தானத்தின் மகிமை- அதாவது இடத்தின் மகிமை!' இங்கு எப்படி என்று கேட்டால்...

உத்தரகுமாரன் சிறிது நேரம் உட்கார்ந்து தேர் ஓட்டினானே, அந்த இடத்தின் மகிமைதான் அவனுக்குப் பெருமையைச் சேர்த்துக் கொடுத்தது.

அது 'சீட்டு'க்கு உள்ள பெருமை.

பிற்காலத்தில், ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்தப் போகும் 'சீட்' இல்லையா அது? அந்த சாரதி ஸ்தானத்தில் உத்தரகுமாரன் முன்பே உட்கார்ந்தான். அதனால் அவனுக்கு அனைத்து பெருமை கிடைத்தது.

ஒரு நாற்காலிக்கு மதிப்பு அதில் அமர்கிறவர்களைப் பொறுத்துத்தான் ஏற்படுகிறது. "இதோ இருக்கிறதே... இது இன்னார் அமர்ந்த நாற்காலி!'' என்று நாம் சொல்லிக் கொள்கிறோம் அல்லவா?

நாம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தால்... அந்த நாற்காலி ஏற்கனவே வாங்கி வைத்திருக்கும் பெருமையைக் காப்பாற்றும் அளவுக்கு அதில் நாம் உட்கார வேண்டும்!

அதுதான் நமக்கும் நல்லது... நாற்காலிக்கும் நல்லது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# நிரந்தரக் கட்டடமில்லாது இயங்கும் முள்ளியவளை அஞ்சல் அலுவலகம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை அஞ்சல் அலுவலகம் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து இதுவரை நிரந்தர காணி மற்றும் கட்டடம் இன்றி இயங்கி வருகின்றது.

இவ்வலுவலகத்திற்கு 76 வருடங்களாக நிரந்தர காணி, கட்டடம் என்பன இல்லை. 1980 ஆம் ஆண்டு அஞ்சல் அலுவலகமாக தரமுயர்த்தப்பட்டு வித்தியானந்த கல்லூரிக்கு அருகிலுள்ள தனியார் காணி ஒன்றில் இயங்க ஆரம்பித்து இன்று வரை நிரந்தர கட்டடம் இன்றி இயங்கி வருகின்றது.

முல்லை. மாவட்டத்தில் உள்ள 22 கிராம சேவையாளருக்குரிய அதாவது 15 ஆயிரம் பேர் தபால் சேவையைப் பெறுகின்ற முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய அஞ்சல் அலுவலகமாகும்.

போருக்கு பின் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் இவ் அஞ்சல் அலுவலகத்திற்கு மின்சாரம் இல்லை. இதனால் மின்சாரத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் அனைத்து வேலைகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றன.

இங்கு காணி வசதி இருந்தும் அதனைச் செயற்படுத்த முடியாதுள்ளது. தபால் அதிபர் மற்றும் ஊழியர்கள் தங்குவதற்கு தங்குமிட வசதி, மலசல கூட வசதி, குடிநீர் வசதி என்பனவும் இங்கு இல்லை.

தளபாட வசதி போதாதுள்ளது. இத் தற்காலிக கட்டடத்திலும் இட வசதி போதாதுள்ளது. நிரந்தர கட்டடம் இல்லாமை தொடர்பாக பலமுறை முல்லை. மாவட்ட அரச அதிபர், உதவி அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் ஆகியோருக்கு கடிதமூலமும் தெரிவித்தும் நேரடியாக தெரிவித்தும் இது வரை எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-267)

# கணனி வன்பொருள் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் (NAITA) ஏற்பாட்டில் கணனி வன்பொருள் (Computer Hardware) பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது தொடக்கம் 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கணனி வன்பொருள் கற்கை நெறிக்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும். (அ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 85 | 100-120 | 160 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 300 | 260 |
| தக்காளி | 100 | 150 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 80 | 120 | 160 |
| பூசணி | 30 | 30 | 40 | 60 |
| புடோல் | 40-50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60-70 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 180 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 130 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 110 | 120 | 120 |
| பீற்றூட் | -- | 100 | 140 | 110 |
| கறிமிளகாய் | -- | 160 | 160 | 200 |
| முருங்கைக்காய் | -- | -- | 200 | -- |
| போஞ்சி | 60-70 | 60 | 80 | 70 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 80-90 | 100 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 20-45 | 40 | 35 | 30-35 |

# இராசி பலன்

20.12.2012

(மார்கழி 05, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு

அட்டமி பின்னிரவு 4.33 மணிவரை

பூரட்டாதி பிற்பகல் 1.53 மணிவரை

இராகுகாலம் 1.54-3.24 மணிவரை

சுபநேரம் 7.54-9.54 மணிவரை

**மேடம்** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை உருவாகும், பொழுது போக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், உறவினர் வருகையுண்டு.

**மிதுனம்** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொல்லை தந்தவர்களே தோள் கொடுத்து உதவ முன்வருவர்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழ்வீர்கள், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, சில கட்டுப்பாடுகள் ஏற்படலாம்.

**சிங்கம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், எடுத்த கருமங்களில் தாமதங்கள் ஏற்பட இடமுண்டு, வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக்கும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**கன்னி** குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் தோன்றும், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கும்.

**துலாம்** நல்ல செய்திகள் நாடி வரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உற்சாகமான நாள், வருமானம் அதிகரிக்கும், சத்துரு ஜெயமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், புண்ணிய கருமங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சொல்லை செயலாக்கி காட்ட முன்வருவீர்கள்.

**தனுசு** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், நண்பர்களால் உதவியுண்டு, தாய் வழியில் அனுகூலமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் நீன்மையுண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, கூட்டு முயற்சியில் வெற்றியுண்டு.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், மதிப்பும் மரியாதையும் உயரும், மாதர் நட்புண்டு.

**மீனம்** பெரியோர் சந்திப்புண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு, போசன நன்மையுண்டு, அதிக பிரயாசை எடுப்பீர்கள், யாரிடமும் முற்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில்

# காணிப் பிரச்சினை தீர்ப்பது உள்ளிட்ட எட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றம்

**காணியற்ற குடும்பங்களின் விபரங்கள் பதியப்பட்டு எதிர்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் காணிகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் எட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அதில்

✦ காணியற்ற குடும்பங்களின் விபரங்கள் பதியப்பட்டு எதிர்காலத்தில் முறைப்படியும் முன்னுரிமை அடிப்படையிலும் காணிகள் பகிர்ந்தளிப்பது.

✦ தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களை பயன்படுத்தி தொழில் நடவடிக் கையில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களை கடற்றொழில் சமாசங்கள் கண்காணிப்பதோடு அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொண்டு கட்டுப்படுத்த வேண்டும்.

✦ வீட்டுத்திட்ட உதவிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்றடைய வேண்டும். இதனை அரச அதிகாரிகள் கவனத்திலெடுத்து பயனாளிகள் தெரிவினை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும்.

✦ கண்டாவளை பிரதேசத்திலுள்ள 24 பாடசாலைகளினதும் காணிகளை நில அளவை செய்து உரிய வரைபடங்களை வழங்குதல் வேண்டும்.

✦ பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திற்கு வருகை தரும் திணைக்களங்களின் அதிகாரிகள் மக்களுக்கு தெளிவாக விளங்கக்கூடிய வகையில் புள்ளி விபரத் தகவல்களுடன் சமுகம் தர வேண்டும்.

✦ கல்வித்துறையை பொறுத்த வரை பௌதீக வளங்களை முன்னேற்றுவத்த விட கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான வேலைத் திட்டங்களை முன் னெடுக்க வேண்டும்.

✦ நீர் வரி இடா ப்பு பதிவுகளை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✦ பண்ணங்கண்டி- கரடிப்போக்கு வீதி புனரமைப்புக்கு நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் என பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் இடம் பெற்ற இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)


## யா/சிதம்பராக் கல்லூரி,பழைய மாணவர் சங்கம் வல்வெட்டித்துறை

### வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்:- 30.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
இடம்:-கல்லூரி மண்டபம்
தலைமை:- திரு.ஆ.சே. குலநாயகம் அவர்கள்
(தலைவர், பழைய மாணவர் சங்கம், வல்வெட்டித்துறை)

நிகழ்ச்சி நிரல்

1. தலைமையுரை
2. கடந்த பொதுக்கூட்ட அறிக்கை
3. ஆண்டறிக்கை
4. வருடாந்தக் கணக்கறிக்கை
5. பிரேரணைகள்
6. புதிய செயற்குழுத் தெரிவு
7. பிற விடயங்கள்

சிதம்பராக் கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

✷ *பிரேரணைகள் யாவும் 27.12.2012 காலை 10.00 மணிக்கு முன்பதாக செயலாளரிடம் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

(சு/1812)

பொ.வெங்கடேஸ்வரன்
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
வல்வெட்டித்துறை.
16.12.2012


### கிளிநொச்சி மாவட்டத்தில்

# நேர்முகப்பரீட்சை நடைபெற்றபோது மத்தியஸ்தர்சபை உருவாக்கப்படவில்லை

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாகவும் மத்தியஸ்தர் சபைகளை உருவாக்குவதற்கான தலைவர், உறுப்பினர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு கடந்த ஓகஸ்ட் மாதம் மத்தியஸ்தர் சபை ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட போதும் இதுவரை மத்தியஸ்தர்சபை உருவாக்கப்படவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால் கிராம மட்டத்தில் பல பிணக்குகள் தீர்க்கப்படாமலும் அதற்கான ஆலோசனை வழங்கப்படாமலும் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் இவ்விடயத்தில் உடன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)


## உடனடி வேலைவாய்ப்பு

**AL MUTAWA CATERING COMPANY K.S.A**(அல்முதாவ்வா கேட்டரின் கம்பனி சவுதிஅரேபியா)

| S/N | CATEGORY | NOS | SALARY (SR) | SALARY (SL) |
|---|---|---|---|---|
| 01 | CATERING HELPER - கேட்டரின் உதவி யாளர் | 50 | 500+200 | 18500+7400 |
| 02 | ELECTRICIAN - மின் இனைப்பாளர் | 05 | 1000+200 | 37000+7400 |
| 03 | PLUMBER - குழாய் திருத்தினர் | 04 | 1000+200 | 37000+7400 |
| 04 | ASST. COOK - உதவி சமையற்காரர் | 04 | 1000-1500 | 37000-55500 |
| 05 | SALAD MAKER - செலட்வகை தயாரிப்பாளர் | 03 | 1000-1500 | 37000-55500 |
| 06 | BANQUET WAITER - பெங்கட் உணவு பரிமாறுபவர் | 03 | 1000-1200 | 37000-44400 |
| 07 | BUILDING PAINTER - கட்டிட பெய்ன்டர் | 45 | 1100- 1500 | 40700- 55500 |

**COMPANY VACANCIES** சவுதி அரேபியா/கட்டார் உடனடி வேலைவாய்ப்பு

| S/N | CATEGORY | NOS | SALARY (SR) | SALARY (SL) |
|---|---|---|---|---|
| 01 | TINKER / WELDER - டின்கர் / வெல்டர் | 09 | 1500-1800 | 54000-64800 |
| 02 | ALMINIUM WORKER(CURTAIN)- அலுமினியம் பொருத்துனர் | 18 | 1250-1500 | 46250-54000 |
| 03 | ELECTRICIAN - மின் இனைப்பாளர் | 03 | 1300-1500 | 46800-54000 |
| 04 | STEEL FIXER - கம்பி கட்டுவோர் | 10 | 1000-1200 | 37000-43200 |
| 05 | SAND BLASTER/AIRLESS PAINTER- மணல்தகர்ப்பு பெய்ன்டர் | 10 | 1400-1700 | 51800-62900 |
| 06 | MASON - மேசன்வேலை | 07 | 1200-1400 | 43200-50400 |
| 07 | A/C TECHNICIAN - ஏசி டெக்னீசியன் | 03 | 1300-1500 | 46800-54000 |
| 08 | MECHANICAL HELPERS - மெக்கானிக்கல் உதவியாளர் | 07 | 800-1000 | 28800-36000 |
| 09 | CARPENTER - தச்சுவேலை | 10 | 1200-1400 | 43200-50400 |

**நிபந்தனைகள்:** இலவச தங்குமிடவசதி. வைத்திய வசதி மேலதிக வேலை நேர கொடுப்பனவுகள் இரண்டு வருடஒப்பந்தகாலம்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : சுதாகரன் - 0779580588

Mantek Enterpries Labour LIC No: 1449
No:535/2/1, Galle Road, Wellawatte,Colombo-06,
T.P No: 011-4375911 Fax:011-4510549
E-Mail: mantek.enterprises@yahoo.com


# வெலிக்கடை கலவரம் குறித்த அறிக்கை இதுவரை கிடைக்கவில்லை

### மனித உரிமை ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த நவம்பர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் படுகொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை எதிர்பார்த்திருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு மூன்று வாரங்களுக்குள் அறிக்கை தருவதாக கூறியிருந்தது.

குறித்த அறிக்கைகள் தொடர்பிலும் சிறைச்சாலை படுகொலை தொடர்பிலும் விடையளிக்கப்படாத பல வினாக்கள் உள்ளன என ஐ.தே.கவின் ஹரின் பெர்னாண்டோ எம்.பி கூறினார்.

இந்த அறிக்கை நம்பக்கூடியதாக இல்லாதிருப்பினும் அறிக்கையை வெளியிடுவது மிகமிக முக்கியமான விடயம் எனவும் அவர் கூறினார்.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கேட்டுக்கொண்டபடியால் மனித உரிமை ஆணைக்குழு தனது விசாரணையை செய்யாதுள்ளது என மனித உரிமை ஆணைக் குழுவின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ கூறினார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் இடம் பெற்ற சூழல் மற்றும் நிலவரம் குறித்து அமைச்சரோ அல்லது வேறு அமைப்புக்களோ எந்த விபரத்தையும் தமக்கு வழங்கவில்லை எனவும் பிரியந்த கூறினார்.

கைதிகளை வரிசையாக நிறுத்தி பெயர்களை பட்டியல்படுத்திய பின் படைகள் அவர்களை சுட்டுக்கொன்றதாக பல கைதிகள் ஊடகங்களுக்கு கூறியிருந்தனர். (அ-2)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழவன்காடு கலாமன்றத்தின் திருவெம்பாவை உற்சவம்


(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் திருவெம்பாவை உற்சவ நாளை முன்னிட்டு சிறப்பு பட்டிமன்றம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

*மனித வாழ்வின் மேன்மைக்கு பெரிதும் உதவி நிற்பது படிப்பா பட்டறிவா* என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ள இப்பட்டிமன்றத் தின் நடுவராக முன்னாள் மாவட்ட நீதிபதி விக டகவி மு. திருநாவுக்கரசு பங்கேற்கவுள்ளார்.

இதில் மனித வாழ்வின் மேன்மைக்கு பெரிதும் உதவி நிற்பது படிப்பறிவு என்ற தலைப்பில் யாழ். திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை பகுதி நேர விரிவுரையாளர் சட்டத் தரணி கே. சுகாஸ், காரைநகர் பிரதேச செய லக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ப.ஐங்கரன், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் கே.எஸ். றமணன் ஆகியோரும் பங்கேற்று விவாதிக் கவுள்ளனர்.

இதேநேரம் மனித வாழ்வின் மேன்மைக்கு பெரிதும் உதவி நிற்பது பட்டறிவு என்ற கருத் திற்கு பூநகரி பிரதேச செயலக சமுர்த்தி முகா மையாளர் எஸ். கெங்காதரன், முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி ஆசிரியர் வேல். நந்தகுமார், யாழ்ப்பாணம் காணி மாவட்ட பதிவாளர் பரா. றமேஸ் ஆகியோரும் பங்கு பற்றி விவாதிக்கவுள்ளனர். (அ-2)



# திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் கோப்பாய் பொலிஸாரால் கைது

## பல பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு டையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்த தோடு அவர்களிடமிருந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங் களையும் கைப்பற்றியுள்ளனர்.

கோண்டாவில் நாராயணன் வீதியில் பதுங் கியிருந்த போது குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் இரவு கோப்பாய் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மற் றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இணை ந்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் அவர்களினால் திருடப்பட்டதாக கருதப்படும் பல ஆயிரம் ரூபா பெறுமதியான இலத்தி ரனியல் பொருட்களைப் பொலிஸார் மீட்டுள் ளனர்.



மீட்கப்பட்ட பொருட்களுடன் பொலிஸார்....

சந்தேக நபர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருட்களில் இரண்டு தொலைக்காட்சியும் (இதில் ஒன்று சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான எல்.சி.வகை தொலைக்காட்சி), ஐந்து நீர் இறைக்கும் மோட்டார்கள், சி.டி பிளேயர் இரண்டு உள்ளிட்ட பல இலத்திர னியல் சாதனங்கள் காணப்பட்டன.

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குள் கடந்த காலத்தில் பல திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்களுடன் குறித்த சந்தேக நபர்களுக்கு தொடர்பு உள்ளதாக பல கோணத் தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொ ண்டு வருகின்றனர் என கோப்பாய் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சிறி நிக ஜெயக்கொடி தெரிவித்தார். அத்தோடு கட ந்த காலங்களில் கோப்பாய் பொலிஸ் நிலை த்திற்குட்பட்ட பகுதியில் பல திருட்டுச் சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளமையும் அங்கு பதி வாகியுள்ளன.

எனவே, அந்தத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கூடிய கவனம் எடுத்துச் செயற் படும்படி யாழ்.பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா மற்றும் யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி. எம். எம்.ஜிப்றி ஆகியோர் தமக்கு உத்தரவிட்டதா கவும் தெரிவித்தார்.

மேலும் கோப்பாய் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பகுதியில் கடந்த காலத்தில் இடம் பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் கூடிய கவனம் எடுத்துச்செயற்படுவதாகவும் தெரிவி த்தார் .

மேலும் வீதிகளில் இரவு 7 மணிக்குப் பின்னர் ஒன்றுகூடும் இளைஞர் குழுக்கள் விரட்டி அடிக்கப்பட்டு வருவதாகவும் மதுபோதை யில் வீதி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்ப டுத்துபவர்கள், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் மற்றும் பொது இடத்தில் மது அருந்தியவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அது மட்டுமன்றி பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு யாராவது பங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டால் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு முறையிட்டால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். (அ-6)

# மாயக்கை பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

அல்வாய் மாயக்கை பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை அப்ப குதியில் காணப்படுவதாக மக்களினால் காணப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரு க்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீ.எம் வீதியைச் சேர்ந்த குமாரசாமி கருணாநிதி (வயது 45) என்பவரின் சடலம் என அவரது சகோதரியி னால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது, பருத்தித்துறை வீ.எம் வீதி பகுதியில் தனது சகோதரியுடன் வசித்து வந்த குறித்த நபர் சில நாட்களாக சகோதரர் வீட்டிற்கு செல் லாமல் மது பாவித்து வந்ததாகவும் நேற்று முன்தினம் மாலை அதிகளவான மது பாவி த்து நடக்கமுடியாமல் இருந்ததாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பின்னர் குறித்த நபர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (அ-3-24)




# சிகை அலங்கரிப்பு நிலையம் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நத்தார் புதுவருட தினங்களை முன்னி ட்டு எதிர்வரும் 23, 30 ஆம் திகதிகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறக் கப்படும் என வட பிராந்திய சிகை ஒப் பனையாளர் சங்க சுன்னாகக்கிளை அறி வித்துள்ளது.

இதேவேளை, நத்தார் தினமான 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சிகை அல ங்கரிப்பு நிலையங்கள் திறக்கப்படமாட் டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாலக்கடலில் 50 மீற்றருக்கு அப்பால் தொழில் செய்ய வேண்டும்

## க.தொ.சங்க கூட்டத்தில் தெரிவிப்பு

பொன்னாலை பாலக்கடலில் இரு மருங் கிலும் சுமார் 50 மீற்றருக்கு அப்பாலே கடற் தொழில்செய்ய வேண்டுமென காரைநகர் கடற் தொழிற்சங்க கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு ள்ளது.

கடல் வாழ் உயிரினங்களின் நன்மை கருதியும் எதிர்காலத்தில் கடற்றொழிலாளர் களின் நன்மைகருதியும் பாலத்தின் இரு மருங்கிலும் சுமார் 50 மீற்றர் தூரத்திற்கு அப் பால் தொழில் செய்யுமாறு கூறப்பட்டிருந் தது.

ஆனால், தற்போது பாலத்திற்கு அருகில் கடல் வலைகள் விரிக்கப்பட்டு இருப்பதனால் கடல்வாழ் உயிரினங்கள் மட்டுமல்லாது எதிர் காலத்தில் கடற்றொழில் முற்றாக பாதிக்கப் படும் நிலை உருவாகியுள்ளது.

இந்நிலைமை சம்பந்தமாக கடற்றொழி லாளர் சங்க கூட்டங்களில் கடற்றொழிலாளர் பரிசோதகர், பொலிஸார் உட்பட கலந்து கொண் டோரால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பாலத்திற்கு அண்மையில் வலை விரிக்கும் செயற்பாடு தொடர்ந்தால் கடற் படையின் உதவியுடன் அவ்வலைகளை அக ற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். ஆதலால் அவ் வலைகளை அப்புறப்படுத்துமாறும் 50 மீற்றருக்கு அப்பால் தொழிலை செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-3-246)

# கைதான இளைஞன் விளக்கமறியலில்

விபத்தினை ஏற்படுத்தி முதியவர் ஒருவர் உயிரிழக்க காரணமாக இருந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கோப்பாய் பொலிஸா ரால் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் கடந்த 4ஆம் திகதி நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டி ருந்த இளைஞன் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த முதியவருடன் விபத் துக்குள்ளானார்.

விபத்தில் சிக்கிய முதியவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதி க்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனளிக் காத நிலையில் கடந்த 16 ஆம் திகதி உயிரி ழந்தார். இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர் ந்த ஆறுமுகம் மகேந்திரன் (வயது72) என் பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்நிலையில் கடந்த 17 ஆம் திகதி விபத் துக்கு காரணமானவர் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்ததோடு யாழ்.நீதவான் நீதிமன் றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது நீதவான் அவ் இளைஞனை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸா ருக்கு உத்தரவிட்டார். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## 02.12.2012-20.06.2014

# மேடம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை1ஆம்பாதம்**

**சுற்றும் கேது வருவதனால், சுப விரயங்கள் உருவாகும்!** **60/100**

**எந்தவொரு காரியத்திற்கும் ஆலோசனை கூறுவதில் வல்லவர்களாக விளங்கும் மேட இராசி நேயர்களே!**

நவக்கிரகங்களில் மிகுந்த பலம் பெற்ற கிரகமாக விளங்குவதுதான் உங்கள் இராசிநாதனான செவ்வாய். எனவே தைரியம் உங்கள் உடன்பிறப்பாக இருக்கும். தன்னம்பிக்கை உங்கள் உயிர்மூச்சாக இருக்கும். எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றும்வரை உங்களுக்குத் தூக்கமே வராது.

பிரயாணங்களில் அதிகம் பிரியம் வைப்பவர்கள் நீங்கள். உழைப்பின் மேல் நீங்கள் அதிக அக்கறை செலுத்துவதால்தான் இழப்புகளைப் பற்றி கவலைப்படமாட்டீர்கள். அவசரமும் படபடப்பும் உங்களை அண்டியிருக்கும் பொழுது ஆதரவுக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை குறையும். எனவே, நிதானத்துடன் செயலாற்ற நீங்கள் கற்றுக்கொண்டால், நிலையான எதிர்கால வாழ்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொள்ள இயலும். உங்களுக்கு அஷ்டமாதிபதியாகவும் செவ்வாயின் வீடு அமைவதால், தனக்குத்தானே எதிரியாகும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உண்டு.

எனவே, முன்கோபத்தை விட்டுவிட்டு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் விதத்தில் அன்பாகப் பேசி காரியம் சாதிக்கக் கற்றுக்கொண்டால் அகில உலகத்திலும் உங்களுக்கு இணை யாரும் இல்லை. உங்களுக்கு இந்த இராகு- கேது பெயர்ச்சி எப்படியெல்லாம் மாற்றத்தைக் கொடுக்கப் போகிறது என ஆராய்வோம்.

**வந்த கேதுவுக்கு வழிபாடு தேவை! சப்தம இராகுவிற்கு சுவாமி துணை தேவை!**

இதுவரை விருச்சிக இராசியில் சஞ்சரித்து வந்த இராகுவும் இடப இராசியில் சஞ்சரித்துவந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 02.12.2012 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகள் தீர வழி வகுக்கப் போகிறார்கள். தேடிவந்த கேதுவை திருப்திப்படுத்த வந்த அன்றே வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். இல்லையேல் வந்த 30 நாட்களுக்குள் உங்களுக்கு அனுகூலம் தரும் நட்சத்திரம் மற்றும் நாள் பார்த்து யோகம் பலம்பெற்ற நேரத்தில் சர்ப்ப சாந்தி வழிபாடுகளை உங்களுக்கு அனுகூலம் தரும் ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து செய்ய வேண்டும்.

ஜென்மகேது சிறப்பான பலன்களை வழங்குமா? 7ஆம் இடத்து இராகு இனிய பலன்களைக் கொடுக்குமா என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், மேஷகேது உங்கள் ஆசைகளை நிறைவேற்றும் என்பதை நீங்கள் உங்கள் அனுபவத்தில்தான் உணர்ந்துகொள்வீர்கள். ஏனென்றால், கேதுவுக்குரிய நட்சத்திரமான அச்சுவினி உங்கள் இராசியில்தானே இருக்கிறது. எனவே, தன் பாதத்தில் அது சஞ்சரிக்கும்பொழுது பொன்னும் பொருளும் போற்றுகின்ற செல்வாக்கும் இன்னும் பெருக வழிவகுக்கும்.

கேது, ஜென்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது உடல்நலம் சீராக இருக்குமா என்று நீங்கள் நினைக்கலாம். பாம்புக் கிரங்கள் இராசியில் சேரும் பொழுது வீம்பு செய்பவர்களை விட்டுவிலக வேண்டும். வெற்றிக்கு வழிகாட்டும் நண்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படுகின்ற பொழுதே மருத்துவரிடம் ஆலோசனைகளைப் பெறவேண்டும்.

ஞானகாரகன் எனப்படும் கேதுவைத் திருப்திப்படுத்த அருகில் இருக்கும் ஆலயங்களுக்கு அனுதினமும் செல்ல இயலாவிட்டாலும்கூட, வாரம் ஒருமுறை சென்று வழிபடலாம். நவக்கிரகத்திலுள்ள கேதுவை வழிபடலாம். கேதுவிற்குரிய தெய்வமாக வர்ணிக்கப்படும் விநாயகப்பெருமானையும் வழிபாடு செய்யலாம்.

ஜென்ம கேதுவின் ஆதிக்கம் வரும்பொழுது ஞானம் உங்களைத் தேடிவரும். அஞ்ஞானம் உங்களை விட்டகன்று ஓடும். வாழ்க்கையை இப்படித்தான் வாழவேண்டும் என்று கற்றுக்கொள்வீர்கள். நட்பிலும்சரி, உறவிலும்சரி பாசம் காட்டுபவர் யார், வேஷம் போடுபவர் யார் என்பதை இனம் கண்டுகொள்வீர்கள். இருப்பினும் நேசம் காட்டுபவர்கள்கூட இந்தக் கேதுவின் ஆதிக்கத்தால், ஒருசில சமயங்களில் பகையாக மாறலாம். பாதியில் சில பணிகள் நிற்கலாம். மோதிவந்த பிரச்சினை முற்றுப் பெறாமல் போகலாம். எனவே, வாதிடுபவர்களைக் கண்டால் விலகிச் செல்லலாம். வம்பு செய்பவர்களைக் கண்டால் நெம்புகோலாக மாறாமல் நீங்கள் விலகிச் செல்லுங்கள். பயணங்கள் அதிகரிக்கும். எனவே, இந்த நேரத்தில் வாகன மாற்றம், வசிக்கும் இடத்தில் மாற்றம், வளர்ச்சிதரும் விதத்தில் அமையலாம்.

வருமானம் வந்த மறுநிமிடமே செலவாகிறது என்று கவலைப்பட வேண்டாம். தர்ம காரியங்களைச் செய்யும் அளவிற்கு தனவரவைக் கொடுப்பவனும் கேதுதான். பெருமையோடு செலவழித்து வந்த நீங்கள் பேச்சிலும் செயலிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வைப்பவனும் கேதுதான். அந்தக்கேது உங்கள் சுயஜாதகத்தில் ஒரு இடத்தில் இருக்கலாம். உங்கள் மனைவி மக்களுக்கென்று உள்ள சுயஜாதகத்தில் ஒரு இடத்தில் இருக்கலாம். அதில் உள்ள கேது, ராகு எந்த நட்சத்திரக்காலில் இணைந்திருக்கிறார் எந்தெந்தக் கிரகங்களெல்லாம் அதைப்பார்க்கிறது என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப அவர் நல்ல பலனை வாரிவழங்க உள்ள படியே செய்யவேண்டிய பரிகாரம் என்ன? எந்த ஸ்தலத்திற்குச் சென்று வந்தால், வந்த துயரங்கள் மறுநிமிடமே விலகி ஓடும் என்பதையெல்லாம் நீங்கள்அறிந்துகொண்டு செயற்பட்டால், இந்தநேரம் இனிய நேரமாக அமையும்.

**7ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகு இனிய பலன்களை ஏற்படுத்துமா?**

ஜென்மத்தில் கேது சஞ்சரிக்கும் இந்தநேரத்தில் 7ஆம் இடத்தில்தான் இராகு சஞ்சரிப்பார். 7ஆம்இடம் என்பது களத்திர ஸ்தானம் என்றும் குடும்ப ஸ்தானம் என்றும் சொல்லப்படும் இடமாகும். துலாமில் சஞ்சரிக்கும் இராகு தொல்லைகளைக் கொடுக்குமா அல்லது வல்ல பலன்களை வாரிவழங்குமா என்ற சிந்தனை உங்களுக்கு வந்துகொண்டேயிருக்கும். அது சனியோடு இணைவதால் சராசரி மனிதனைக்கூட சக்கரவர்த்தியாக்கி விடும் யோகம் உண்டு. பதவி உயர்வும் பாராட்டு மழையில் நனையும் வாய்ப்பும் உருவாகும்.



உங்கள் இராசிக்கு தொழில் மற்றும் இலாப ஸ்தானத்திற்கு அதிபதியான சனியோடு அவர் இணைகின்றார். இடையில் 2013 ஆம் ஆண்டு, மேமாதம் குருவாலும் பார்க்கப்படப் போகிறார். எனவே கல்யாணக் கனவுகளை நனவாக்கி வைக்கும் களத்திர ஒற்றுமைக்கும் வித்திட வழிவகுக்கும். பிரிந்து சென்றவர்களை ஒன்றுசேர்த்து வைக்கும் ஆற்றல் சனிக்கு உண்டு. சனி உச்சம் பெறும்பொழுது அது நடைபெறும் அதுவும் சப்தம ஸ்தானத்தில் உச்சம் பெற்றால் தொழில், உத்தியோகத்தில் முன்னேற்றம் கிட்டும்.

அந்த அமைப்பு உங்களுக்கு இப்பொழுது இருப்பதால் குடும்பத்திலுள்ளவர்கள் உங்கள் மனநிலையைப் புரிந்துகொண்டு நடப்பர். கடுமையாக முயற்சித்த காரியங்கள் இனி எளிமையாக முடியும். வெளிநாட்டுப் போக்குவரத்தும் விரும்பும் விதத்தில் அமையும். வீடுகட்டவும் முடியவில்லை. வாங்கவும் முடியவில்லையே... வாழ்க்கை முழுவதும் வாடகை வீடுதானா என்று நினைப்பவர்களுக்கெல்லாம் வழிகாட்டப் போகிறது. இந்த சப்தமராகு. [illegible] இடத்தை வாங்குவீர்கள்; மனையைக் கட்டுவீர்கள்; இருக்கும் பணத்தோடு பற்றாக்குறை ஏற்படுமானால் பண உதவி செய்ய பக்கத்தில் இருப்பவர்களே முன்வருவார்கள். பொதுவாக விரயங்கள் அதிகரிக்க வைக்கும் இந்த இராகு -கேது பெயர்ச்சி விழிப்புணர்ச்சி எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு நற்பலன்களைக் கொடுக்கும்.

**பாதசாரப்படி கேது தரும்பலன்கள்**

மேடஇராசிக்குள் அடியெடுத்து வைத்த கேது சூரியனின் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பிள்ளைகளின் திருமண முயற்சி கைகூடும். பூர்வீக்க சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் மாறும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வார்கள். சுக்கிரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது மூன்றாம் நபரால் பிரச்சினைகள் உருவாகலாம். குடும்ப இரகசியங்கள் வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. வாகன மாற்றம் உருவாகும். பழைய வாகனத்தால் பழுதுச் செலவுகள் உண்டு. நாடுமாற்றச் சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது.

கேது தன் சொந்தக்காலில் சஞ்சரிக்கும் பொழுது நல்லவாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்க முன்வருவீர்கள். பணத்தேவைகள் பூர்த்தியாகும்.

**பாதசாரப்படி இராகு தரும்பலன்கள்**

துலாம் இராசியில் சஞ்சரிக்கும் இராகு குரு காலில் சஞ்சரிக்கும்போது திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். தெய்வீக காரியங்களுக்கும் செலவிட்டு மகிழ்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு ஊர்மாற்றம், இலாகா மாற்றம் ஏற்படும். உடன்பிறப்புகள் வழியில் ஏற்பட்ட வழக்குகள் தீரும்

இராகு சுயசாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பெண்வழி பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். தங்கம், வெள்ளி மற்றும் ஆடை, ஆபரண சேர்க்கைகளும் அதிகரிக்கும். இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு உருவாவதற்கு வழி பிறக்கும்.

இராகு செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும்பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். பணச்சேமிப்பு அதிகரிக்கும். திருமணம், குழந்தைப்பேறு போன்றவற்றில் இருந்த தடை அகலும். கல்வி முன்னேற்றம், புதிய உத்தியோகம் உருவாகும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

ஜெம கேதுவால் சிறப்புகள் வந்து சேரவும் 7ஆம் இடத்து இராகுவால், இல்லத்தில நல்ல காரியங்கள் நடைபெறவும் அருகில் உள்ள சிவாலயத்திற்குச் சென்று செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமான் வழிபாடு செய்வதோடு சுய ஜாதகத்தில் இராகு-கேதுக்களின் சாரபலம் அறிந்து பரிகாரம் செய்வதோடு, உன்னத வாழ்விற்கு அடித்தளமிடும் நவக்கிரகங்களையும் வழிபட்டுவாருங்கள்.

வருமானம் இரு மடங்காகும் சூழ்நிலைகள் ஏற்படலாம். சகோதர ஒற்றுமைக்குறைவு ஏற்படாமல் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(30.11.2012 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
18. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
6. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
7. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
10. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
11. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
12. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
13. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
14. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
15. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
18. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
19. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
20. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
21. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
22. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
23. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
24. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
25. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
26. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
27. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
28. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட்
29. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
30. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
31. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
32. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
33. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
34. பீப்பிள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
35. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
36. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
37. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
38. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
40. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
41. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
42. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
43. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
44. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
45. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
46. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் லிமிடெட்

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு திணைக்களத்தின் வர்ண இரவு நிகழ்வு

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் வர்ண இரவு எனும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.அருமைநாயகம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக வடமாகாண உதவி செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, யாழ். மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

# அரச தாதியர் நேற்று போராட்டம்; நோயாளர்கள் பாடு திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலை அரச தாதி உத்தியோகத்தர்கள் நேற்றையதினம் சுகவீன விடுப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**

இப்போராட்டம் யாழ்.போதனாவில் மட்டுமல்லாது நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளிலும் இடம்பெற்று இருந்தது.

வழமையான ஒரு மணி நேரப் போராட்டம் போல் அல்லாமல் இப்போராட்டம் முழுநாள் போராட்டமாக அமைந்திருந்தது.

நாடு முழுவதிலும் உள்ள 600 சுகாதார நிலையங்களில் 25 ஆயிரம் தாதிமார் இவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு தாய் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். எனினும் ஒருசில தாதியர் சங்கங்கள் இவ்வேலை நிறுத்தத்தில் தாம் ஈடுபடப் போவதில்லை என முன்னரே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. நிறைவேற்றப்படாத கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக்கோரியே மேற்படி வேலை நிறுத்தத்தில் தாதியர்கள் ஈடுபட்டனர். மாகாண ரீதியான தாதியர் ஆட்சேர்பினை உடனடியாக நிறுத்தல், மேலதிக கொடுப்பனவினை உயர்த்துதல், மாதாந்த தொலைபேசி கொடுப்பனவாக நான்காயிரம் ரூபாவை வழங்குதல், பட்டதாரிகளை தாதியர் சேவைக்குள் உடனடியாக உள்வாங்கல், சீருடை கொடுப்பனவை அதிகரித்தல் உட்பட பல கோரிக்கைகளினை முன்வைத்து மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இப்போராட்டத்தின் பின்னரும் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அதிகாரிகள் பின்னடிப்பார்களாயின் மேலும்மொரு வேலை நிறுத்தத்தை அவர்கள் எதிர்கொள்ள வேண்டும் என சங்கத்தலைவர் சமன் ரத்ன பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் இப்போராட்டம் காரணமாக பெருமளவிலான நோயாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். தமிழர் பிரதேசங்களில் உள்ள யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய வைத்தியசாலைகளில் வெளி நோயாளர்கள், சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடனேயே வீடு சென்று இருந்தனர்.

சில வைத்தியசாலைகள் சனநடமாட்டமின்றி வெறிச்சோடியும் காணப்பட்டன. இதேவேளை, நேற்றுமுன்தினம் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்களும் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுப்பில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறான தொடர்ச்சியான போராட்டங்களினால் நோயாளர்கள் பெரும் சிரமங்களினையும் போக்குவரத்து செலவீனங்களினையும் எதிர்நோக்கியிருந்தனர்.

நேற்று மாலை 7மணியளவில் ஆரம்பமாகிய இச்சுகவீன விடுப்பு போராட்டம் இன்று காலை 7 மணியளவில் முடிவுக்கு வந்ததாகவும் இன்று வைத்தியசாலை பணிகள் வழமைக்குதிரும்பும் எனவும் யாழ்.போதனா வைத்தியசாலை சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-4)

# சடலங்களை ஒப்படைப்பதில் தேவையற்ற காலதாமதம்

## அரச அதிகாரிகளின் முரண்பாட்டால்

இறந்தவர்களின் உடலை உறவினர்களிடம் ஒப்படைப்பதில் அரசாங்க உத்தியோத்தர்கள் முரண்பட்டு கொள்வதால் உறவினர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

கடந்த17 ஆம் திகதி இளையதம்பி குமாரசாமி(வயது 70)என்ற முதியவர் நாவலர் வீதியில் தனது வீட்டின் கிணற்றடியில் வழுக்கி விழுந்ததினால் தலையில் அடிப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இவரது சடலம் உறவினர்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இதன்போது இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி என்.உதயசிறி விசாரணைகளை மேற்கொண்டார். உறவினர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் குறித்த முதியவர் கிணற்றடியில் வழுக்கி விழுந்து உயிரிழந்தார் என்பதை மரண விசாரணை அதிகாரி உறுத்திப்படுத்தியதோடு உறவினர்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து பிரேத பரிசோதனை மேற்கொள்ளாமல் சடலத்தை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இருப்பினும் பிரேத பரிசோதனை மேற்கொள்ளாமல் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க முடியாது என பொலிஸார் கடும் தொனியில் கூறியதோடு மரண விசாரணை அதிகாரியுடன் முரண்பட்டு கொண்டனர். இதன் பின்பு பிரேத பரிசோதனைக்கு சடலத்தை உட்படுத்துமாறு திடீர் மரண விசாரணை அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவர் கிணற்றடியில் வழுக்கி விழுந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 10.30 மணிக்கு சடலத்தை ஒப்படைக்கக் கூடியவாறு சூழ்நிலைகள் காணப்பட்ட போதும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முரண்பாட்டால் பிற்பகல் 3 மணியளவிலேயே உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கும் பரிதாபநிலை ஏற்பட்டது. (அ-6)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகள்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக எவ்வித தடைகளும் இன்றி உதவிகள் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகள் 24 மணித்தியாலங்களும் கடமையில் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் கடற்படையினரும் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உலங்குவானூர்திகள், படகுகள் மூலம் நீரில் மூழ்கிய பகுதிகளை சேர்ந்த மக்கள் மீட்கப்பட்டுள்ளனர். (அ-2)

# நாட்டில் நீடித்த வரட்சியால் அரிசி பற்றாக்குறை ஏற்படும்

## எதிர்வுகூறுகிறார் விவசாய அமைச்சின் செயலாளர்

நாட்டில் கடந்த 14 மாதங்களாக நிலவிய வரட்சி காரணமாக அடுத்த பெப்ரவரி மாதம் வரை அரிசிப்பற்றாக்குறை ஏற்படும் என விவசாய அமைச்சின் செயலாளர் டபிள்யூ. ஏ.சகல சூரிய நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அரிசித்தட்டுப்பாட்டினால் அடுத்த சில வாரங்களில் விலை அதிகரிப்பு ஏற்படும் சூழ்நிலை காணப்படுவதாகவும் பெப்ரவரி மாத அறுவடைக்கு பின்னரே விலைகள் குறைவடையலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக்காலத்தில் சிறப்பாக உள்ளூர் சந்தைகளில் அரிசி பற்றாக்குறையினை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் விவசாய அமைச்சும் இதற்குரிய தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் டபிள்யூ.ஏ.சகலசூரிய தெரிவித்தார்.

நாட்டில் அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து அரசாங்கம் அரிசி ஏற்றுமதியை நிறுத்தியுள்ளது. எனினும் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

மாதாந்த அரிசித் தேவை 198 ஆயிரம் மெற்றிக் தொன்னாக உள்ளது. ஆனால், தற்போது 129 ஆயிரம் நெல் மட்டுமே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் அறிக்கையின்படி வரட்சியினால் வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாணங்களில் 160 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக 4 இலட்சம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்

## அசாத் சாலி கோரிக்கை

நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளம், மழை ஆகிய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை உடனடியாக வழங்க மக்கள் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முஸ்லிம் தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்தஇருதினங்களுக்கும்மேலாக நாட்டின் பல பாகங்களிலும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வீசுகின்ற கடும் காற்று மற்றும் அடைமழை காரணமாக மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

அப்பாவி மக்களின் அன்றாட வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் பல கிராமங்களில் மக்கள் மூட்டை முடிச்சுக்களுடன் சொந்த இடங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். இன்னும் சிலர் அதற்குக்கூட வழியின்றி வெள்ள நீருடன் தமது வீடுகளே தஞ்சம் என்று தவித்து வருகின்றனர். (அ-2)

# அரச வாகனங்களுக்கு அரச முத்திரை அவசியம்

## அமைச்சர் செனவிரத்ன உறுதிபட தெரிவிப்பு

இலங்கையில் உள்ள அனைத்து அரச வாகனங்களுக்கும் அரசாங்க முத்திரை கட்டாயம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும் என்று அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்த சுற்றறிக்கை சகல அரசாங்க நிலையங்களுக்கும் மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க வாகனங்களை பொறுப்பின்றி பயன்படுத்துதல் மற்றும் சாரதிகள் அசாதாரண முறையில் வாகனங்களை பயன்படுத்துதல் தொடர்பில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அந்த முறைப்பாட்டினை அடுத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ந-11)

## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் கந்தையா

### இளைப்பாறிய ஆசிரியர்

(யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க. சாதனா பாடசாலை)

கோப்பாயை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் கந்தையா 18.12.2012 செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சபாரத்தினம் மற்றும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துலட்சுமியின் அன்புக் கணவரும் மற்றும் சேமபராபரன் (முன்னாள் கிளை முகாமையாளர், நல்லூர், ப.நோ. கூ. சங்கம்), காலஞ்சென்ற திரவியநாயகம் மற்றும் மஹேந்திரநாயகம் (பாதுகாப்பு உத்தியோகத்தர் கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை), கிருபாகுமாரி (யாழ். மாநகர சபை நூலகர்), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் மற்றும் புஸ்பராணியின் (கொக்குவில்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.12.2012 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.108/1, கச்சேரி நல்லூர் வீதி.

தகவல்
மகன்- மஹேந்திரநாயகம்,
மகள்- கிருபாகுமாரி.

(189)




★1192-சிலுவைப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு இங்கிலாந்து திரும்பும் வழியில் முதலாம் ரிச்சார்ட் ஆஸ்திரியாவின் ஐந்தாம் லியோபோல்டினால் கைது செய்யப் பட்டான்.

★1606-வேர்ஜீனியா கம்பனியின் மூன்று கப்பல்கள் ஆங்கிலேயர்களை ஏற்றிக் கொண்டு வேர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுனை நோக்கிக் கிளம்பியது. இதுவே அமெரிக்காவில் இடம்பெற்ற முதலாவது நிரந்தர ஆங்கிலக் குடியேற்றத் திட்டமாகும்.

★1803-பிரெஞ்சுக்களிடம் இருந்து லூசியானா விலைக்கு வாங்கப்பட்டதைக் குறிக்க நியூ ஓர்லென்ஸ் நகரில் பெரும் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

★1944-இலங்கையில் அடிமைகளை வேலைக்கமர்த்துவதற்கெதிரான சட்டமூலம் கொண்டு வரப்பட்டது.

★1860-அமெரிக்க உள்நாட்டுப் போர்: தெற்கு கரொலைனா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து வெளியேறிய முதலாவது மாநிலமானது.

★1915-முதலாம் உலகப் போர்: கடைசி அவுஸ்திரேலியப் படைகள் துருக்கியின் கலிப்பொலி நகரை விட்டுக் கிளம்பியது.

★1917-சோவியத்தின் முதலாவது இரகசியப் பொலிஸ் சேக்கா அமைக்கப் பட்டது.

★1942-இரண்டாம் உலகப் போர்: கொல்கத்தா ஜப்பானியர்களின் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது.

★1943-பொலிவியாவில் இராணுவப் புரட்சி நடந்தது.

★1951-அணுவாற்றலினாலான மின்சாரம் முதற் தடவையாக ஐடஹோவில் பிறப்பிக்கப்பட்டது. இது நான்கு மின்குமிழ்களை எரிக்கப் பயன்பட்டது.

★1952-ஐக்கிய அமெரிக்காவின் வான்படை விமானம் [illegible]னில் மோதி வெடித்ததில் 87 பேர் கொல்லப் பட்டனர்.

★1955-கார்டிஃப் வேல்சின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டது.

★1960-வியட்நாம் விடுதலைக்கான தேசிய முன்னணி அமைக்கப்பட்டது.

★1973-ஸ்பானியப் பிரதமர் லூயிஸ் கரேரோ பிளாங்கோ மாட்ரிட் நகரில் கார்க்குண்டுவெடிப்பில் உயிரிழந்தார்.

★1984-இங்கிலாந்தில் சுரங்கத் தொடரூந்துப் பாதையில் ஒரு மில்லியன் பெற்றோலியப் பொருட்களை ஏற்றிச் சென்ற சரக்கு தொடரூந்து ஒன்று தடம் புரண்டு தீ பரவியதில் பலத்த சேதம் ஏற்பட்டது.

★1987-பிலிப்பைன்சில் பயணிகள் கப்பல் ஒன்று எண்ணெய்த் தாங்கிக் கப்பலுடன் மோதி மூழ்கியதில் அதிகாரபூர்வமாக ஆயிரத்து 749 பேர் கொல்லப்பட்டனர்.

★1988-போதைப்பொருள் கடத்தலுக்கெதிரான ஐ.நா. சாசனம் வியென்னாவில் கைச்சாத்திடப் பட்டது.

★1989-பனாமாவின் ஜனாதிபதி மனுவேல் நொரியேகாவைப் பதவியிலிருந்து அகற்ற ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை பனாமாவுக்கு அனுப்பியது.

★1995-அமெரிக்க போயிங் விமானம் ஒன்று கொலம்பியாவில் மலை ஒன்றுடன் மோதியதில் 160 பேர் கொல்லப்பட்டனர்.

★1999- போர்த்துக்கல் மக்காவுவை மக்கள் சீனக் குடியரசிடம் கையளித்தது.

### பிறப்புக்கள்

★1901-ராபர்ட் வான் டி கிராப் அமெரிக்க இயற்பியலாளர் (இ.1967)

★1925-மகதிர் பின் முகமது மலேசியாவின் முன்னாள் பிரதமர்

### இறப்பு

★1998-அலன் லொயிட் ஹொட்ஜ்கின், நோபல் பரிசு பெற்றவர் (பி.1914)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு
சிறப்பு மலர் - 20.12.2012

புதிய ஆண்டு ஒளிமயமாக வாழ்த்துகின்றோம் வலம்புரியை..

உங்களுக்காக

# யாழ் நகரில் புதிதாய் நாங்கள்

யாழ் பேருந்து நிலையத்திற்கு அருகில்



High Quality Work

அனைத்து பிறிண்ட் வகைகளுக்கும்...

# பிறிண்டிங் ஹவுஸ்

## Printing House

enjoy the quality, admire the value

**டிஜிற்றல் பிறிண்டிங்** சதுர அடி 40/= முதல்

டிஜிற்றல் பனர்கள் - பெயர்ப் பலகைகள் - ஸ்ரிக்கர் பிறிண்டிங் - விளம்பரப் பதாகைகள்
வாகனங்களுக்கான ஸ்ரிக்கர்கள், பந்தல் தட்டிகள்.
**அதி உயர்தர டிஜிற்றல் பனர் 3 வருட உத்தரவாதத்துடன்...**

## திருமண அழைப்பிதழ்கள்

கண்கவர் வடிவங்களில் புதிய அழகிய அழைப்பிதழ்கள்
குறைந்த விலையில்...

**ஓவ்செற் பிறிண்டிங், ரீசேர்ட், மாபிள் பிறிண்டிங்**

புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், விளம்பரங்கள், போஸ்ரர்கள் மற்றும் சகலவிதமான அச்சு வேலைகளையும் சிறந்த முறையில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.


**165, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**
**Tel: 021 221 9929, 077 220 0148**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் - 20.12.2012


## வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

15 வருட கால அசைக்கமுடியாத நம்பிக்கையுடன்

- 11 Kg நிறையுடைய ஒவ்வொரு பொதிகளுக்கும் 1 Kg க்கு UK 720 /= Germany 740 /= France 815 /= Denmark 775 /= Netherland 825 /=
- மருந்து பொருட்கள், கடலுணவு, மற்றும் எண்ணெய் வகைகள் என்பனவும் அனுப்பிக்கொள்ளலாம்.
- மேலும் சகல நாடுகளுக்கும் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
International Courier & Cargo Service

இல.1 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம். Tel : 021 222 6113

புதிய ஆண்டில் பத்திரிகைத் துறையில் பல விருதுகளை வெல்ல வாழ்த்துகின்றோம் வலம்புரியை...

புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் பிரமாண்டமான மலிவு விற்பனை

## சரவணா ரெக்ஸ்



3000/= க்கு மேல் கொள்வனவு செய்யும் 3 அதிஷ்டசாலிகளுக்குப் பெறுமதியான பரிசில்கள்




யார் அந்த 3 அதிஷ்ட சாலிகள்

WINNER

அதிஷ்டம் பார்க்கப்படும்.
வாடிக்கையாளர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவருக்குமான அனைத்து விதமான ஆடைகள்

புதிய தெரிவில்

15-12-2012 முதல் 31-12-2012 வரை

காலை 9.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

உயர்தரமான ஆடைகளும் குறைந்த விலையும் அதுதான் சரவணா ரெக்ஸ்

டிசம்பர் 31 வரை மட்டுமே இச்சலுகை

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்...!


இடம்: வாரத்தில் 7 நாட்களும் வியாபாரம் நடைபெறும்

சரவணா களஞ்சியசாலை

சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (கெங்காதரன் வைத்தியசாலைக்கு அருகாமை)

யாழ் ஊடகங்களுக்கு வலம்புரி ஓர் வழிகாட்டியாய் மிளிர வாழ்த்துகின்றோம்







## கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனசர சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப் பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
- வான். முச்சக்கர வண்டி. உழவு இயந்திரம் (டெக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்ப பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப் பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணை முறைக் கட்டணம்
- எழுத, வாசிக்க, தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை



தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P :021 222 4353, 0214923200
0714546952, 0777225292

**கிளைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பருத்தித்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி | விசுவமடு | சுன்னாகம் |
| T.P : 0214923201 0714546958 | T.P : 0214923202 0212270700 | T.P : 021 228 5505 0714546955 | T.P : 021 300 6550 0714546957 | T.P : 021 320 1515, 0714546955 | T.P : 021 224 2022, 0714546956 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு
சிறப்பு மலர் - 20.12.2012

# யாழ்ப்பாண உயர்கல்வி வரலாற்றில் முதன்முறையாக

சங்கானையில்

## ■ அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு ■

# Charles Sturt University of Australia
# IDM Nations Campus

(இலங்கையின் மிகமூத்த தகவல் தொழில்நுட்ப உயர்கல்வி நிறுவனம்)

## உடன் இணைந்து வழங்கும்

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் சர்வதேச பல்கலைக்கழகங்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட

only at IDM Chankanai Campus

January 2013 Intakes @ Chankanai

**B.Sc(Hons) in Computing**
**B.Sc(Hons) in Computer Networks**
**B.Sc(Hons) in Software Development**

## The most economical World Class Internal Degree in SriLanka

**20 months in Jaffna**
**Final Year in Australia**

சட்டபூர்வமாகவும் கௌரவமாகவும் வேலைவாய்ப்புடன் அவுஸ்திரேலியாவில் குடியேறும் வாய்ப்பு

சட்டபூர்வமாகவும் கௌரவமாகவும் வேலைவாய்ப்புடன்
அவுஸ்திரேலியாவில் குடியேறும் வாய்ப்பு
யாழ் மாணவர்களுக்கு மிகக் குறைந்த செலவில் உலகளாவிய
அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் பயிலும் மகத்தான வரப்பிரசாதம்

## Selection Criteria:

மாணவர்கள் பொது அறிவு மற்றும் பொது உளச்சார்பு பரீட்சையின் மூலமும் நேர்முகத்தேர்வின் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

*General Knowledge & Aptitude Test:*

அடிப்படைத்தகமை **GCE(O/L)**

**06-01-2013** Sunday 9.00 am @
IDM Chankanai (Luxmy Plaza Main St,Chankanai)

2014 தீபாவளி/ நத்தார் பண்டிகையை அவுஸ்திரேலியாவிலிருந்து கொண்டாட நீங்கள் தயாரா?

**உங்கள் வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு கனவுகளை நாங்கள் நனவாக்குகிறோம்.**

- மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் (20 Students/Batch)
- சிறப்புத்தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்
- *Fully Airconditioned Lecture Hall with Ultra Modern Facilities*
- *Easy Installment payment Scheme*

free IELTS & English Classes

IDM Chankanai Campus

## IDM Nations Campus

Chankanai Branch
Luxmy Plaza Main Street Chankanai
021 7 429 060 / 021 320 23 66

மாணவர்கள் தமது முழுப்பெயர் முகவரி தொ.பே இல. கல்வித் தகமைகளைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை 04-01-2013க்கு முன்பதாக
IDM Nations Campus-Chankanai
Luxmy Plaza-Main Street Chankanai என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு
சிறப்பு மலர் - 20.12.2012


# After O/Level...

## ASAP

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட
USAID
"முற்றிலும் இலவசமான"
கற்கை நெறி......!!!

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills

இலவசம்

பரந்த பாடத்திட்டம்
* தொழில் வெற்றித்திறன்கள்
* ஆங்கில மொழித்திறன்கள்
* கணினித்திறன்கள்

இலவசமாக
தற்போது எங்களிடம் !!!
சர்வதேச
அங்கீகாரத்துடனான சான்றிதழ்



Kilinochchi : 021 228 5444
Jaffna : 021 222 3456

## DiTEC
INTERNATIONAL
Diploma In Information Technology
சர்வதேச அங்கீகாரமுள்ள ஒரே ஒரு
IT DIPLOMA கற்கை நெறி


பட்டப்படிப்பிற்கான முதல் ஆண்டிற்கு
சமனான கற்கைநெறி (B.Sc 1st Year)

Edexcel & ESOFT
2
Certificates


04 மாதகால கற்கைநெறி...

பெறுபேறுகளுக்கு முன்னர்
டிப்ளோமாக்களை
பெற்றுக்கொள்ளுங்கள்

தற்போது
அதிநவீன வசதிகளுடன்



ESOFT
Shaping Lives, Creating Futures.




## Diploma In Computerized Accounting
DiCA

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட
வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தும்
பெறுமதிமிக்க கற்கைநெறி

முற்றிலும் இலவசமாக

இலவசம்

ESOFT
Shaping Lives, Creating Futures.
இடமிருந்து!!!

### Course Contents
- MYOB
- Quick Books
- ACCPAC
- SAGE
- Peachtree
- Tally

New Batches
02.01.2013
05.01.2013
@ 9.00 am



ESOFT
Shaping Lives, Creating Futures.

## ESOFT Metro Campus
No 137, K K S Road, Jaffna
Tel : 021 222 4142


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை எலும்புகள்... எழுப்பியுள்ள கேள்விகள்!

தற்போது மாத்தளை வைத்திய சாலை பூமியில் தோண்டப்படும் முடிவுறாத சடலங்களின் எச்சங்களானது, அரிதான வரலாற்று சந்தர்ப்பங்களில் ஒன்று.

இந்த எலும்புகள் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களென சந்தேகிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுடையது என்பது தெரிய வந்திருப்பதும், அவ்வாறு கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் உரிமைகளுக்காக் குரல் கொடுத்த முன்னிலை அரசியல்வாதி, தற்போது நாட்டின் ஜனாதிபதி என்பதும் இந்த வரலாற்று சந்தர்ப்பத்தின் அரிதான நிகழ்வாகும்.


அத்துடன் இந்த அரசியல்வாதியின் கீழ் போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள மற்றுமொரு காலத்தினூடாக இலங்கை தற்போது பயணித்து வருகிறது.

அன்று அரச படையினரால், காணாமல்போகச் செய்யப்பட்ட ஆயிரக் கணக்கான சிங்கள இளைஞர், யுவதிகளுக்கான நியாயம் கேட்டு நின்றவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. தற்போது கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ்மக்களுக்கான நியாயத்தை இந்த அரசாங்கத்திடமே தற்போது தமிழ் மக்கள் கோருகின்றனர்.

இதனால், மாத்தளையில் அகழ்ந்தெடுக்கப்படும் எலும்புகள் அன்றைய மகிந்த ராஜபக்ச மற்றும் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இடையில் ஆத்மாவாக எழுந்து நிற்கின்றன.

அந்தக்காலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக அரசசார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜெனிவா நகரில் மனித உரிமை பேரவைக்குச் சென்று அரசாங்கத்தினால், கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களின் பட்டியல்களை முன்வைத்தார். மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளின் பெயர்கள் இந்தப்பட்டியலில் இருக்கின்றதா என்பதை கண்டறிய இலங்கை மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமா?

தமிழ் போராளிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போரில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றறச் செயல்கள் தொடர்பான உண்மை மற்றும் பொய்யை தெரிவுசெய்யும்



செயற்பாடுகள் குறித்த வரலாற்று ரீதியான மைய இடத்தை நோக்கி இலங்கை தற்போது பயணித்து வருகிறது. அத்துடன் இந்தப்பயணமானது தெரிவின் அடிப்படையில் மனித உயிர்களின் பெறுமதியை ஏற்றுக்கொள்ளும் அரசியல் சமூக மற்றும் சட்டரீதியான மறுசீரமைப்பு நோக்கிய பயணமாகும்.

இது காலத்தினாலும் போர்ப் பலத்தினாலும் 'அடக்க முடியாத சமூக வரலாற்றுச் சந்தர்ப்பமாகும். கடந்த இரண்டு தசாப்பத காலமாக பல்வேறு தேசங்களில் பல்வேறு கால கட்டங்களில் மனித இனத்தின் வரலாறு மீண்டும் மீண்டும் சமூக பிரயத்தனங்களின் மூலம் நல்வழிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கை இதில் இருந்து மீளும் ஒன்றாக இருக்கும் என எண்ண காரணங்கள் இல்லை. மாத்தளை மனிதப் புதைகுழியானது புதைக்க முடியாத கடந்த காலத்தையே எமக்கு சுட்டிக் காட்டுகிறது.

புதைக்க முடியாத வரலாற்றை புதைக்கும் செயற்பாட்டின் ஊடாக இலங்கையை இந்த சந்தர்ப்பத்தில் கொண்டு சென்று கொண்டிருப்பவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. அவர் இறுதிப்போர் குறித்து உரிய மதிப்பீடுகளை மேற்கொள்ளவோ தமிழர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து பின்நோக்கிப்பார்க்க தயார் என்பதையோ வெளிக்காட்டவில்லை. எனினும் சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் தற்போது மாத்தளையில் மீட்கப்படும் சிங்கள இளைஞர், யுவதிகளின் சாட்சியங்களுக்கு பல காலத்திற்கு முன் தலைமையேற்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு மாத்தளை எலும்புகள், போர்க்களம் தொடர்பான சிங்களவர்களின் கோணத்திற்கு அமைய கலந்துரையாடல்களை நடத்த சந்தர்ப்பதை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களுக்கு யுத்தத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த பேச்சுக்களில் விடுதலப்புலிகளின் வன்முறை, அடிப்படைவாதம் என்பவற்றை நியாயப்படுத்தாததைப் போன்றே தெற்கில் கொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் தொடர்பான பேச்சுக்களில் மக்கள் விடுதலை முன்னணி தலைமை தாங்கிய தேசப்பற்றுள்ள மக்கள் முன்னணியின் வன்முறை, அடிப்படை வாதத்தையும் நியாயப்படுத்த முடியாது.

இலங்கையின் சமூக ஜனநாயக மயப்படுத்தலுக்கு உதவியாக அமையும் இவ்வாறான கலந்துரையாடல்களை கட்டியெழுப்பத் தேவையான அடிப்படையானது, மாத்தளை மனித புதைகுழிதொடர்பான உண்மையை மூடி மறைக்க இடமளிக்காததன் மூலம் கிடைக்கும். இந்தக் கலந்துரையாடல்கள் இதுவரை இணையத்தள ஊடகங்களிலும் மாற்று அச்சு ஊடகங்களிலும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதே கவலைக்குரிய விடயமாகும். இந்தக் கலந்துரையாடல்களை வெளியிடும் ஊடகங்களினிடையில் 1989, 1990 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து- கொலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு நியாயம்கேட்டு- போராடிய மற்றுமொரு அரசியல்வாதியான மங்கள சமரவீர தலைமையில் இயங்கும் எக்ஸ் நியூஸ் இணையத்தளம், இந்த மனிதப்புதைகுழி தொடர்பில்நீண்ட செய்திகளை வெளியிட்டுள்ளது. அவற்றில் சிலவற்றை மேற்கோள் காட்டினால்,

*அன்றைய காலத்தில் மாத்தளை வாடிவீடு, மாத்தளை விஜயவித்தியாலயம் ஆகியவற்றில் இயங்கிவந்த இரண்டு இராணுவ வதைமுகாம்களில் கொலை செய்யப்பட்ட கைதிகளின் சடலங்களே இந்த மனிதப்புதை குழியில் புதைக்கப்பட்டுள்ளன. இந்த முகாமுக்கு பொறுப்பாக இருந்தவர் தற்போது பாதுகாப்புப் பிரிவில் உயர் பதவியை வகிக்கும் அதிகாரியென வதை முகாமில் சித்திரவதைக் குள்ளாகி உயிர் தப்பிய கைதிகள் சிலர் தெரிவித்தனர்.*

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் தலைகளில் கருங்கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியும் கை, கால்கள் கட்டப்பட்டு தண்ணீர் தாங்கிகளில் அமிழ்த்தியும் கைதிகள் கொலை செய்யப்பட்டதாக உயிர் தப்பிய கைதிகள் கூறியுள்ளனர். இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள், மாத்தளை பழைய மெக்டொனால் கோட்டைக்குரிய காணியில், ஒன்றாக புதைக்கப்பட்டன. கடந்த காலத்தில் இந்த வரலாற்று சிறப்புமிக்க கோட்டையுடன் கூடிய காணி மாத்தளை மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப் பட்டது.

உரிய அறிவியல் ஆய்வை நடத்தி இந்த எழும்புகள் எந்த வருடத்தைச் சேர்ந்தது என்பதை கண்டுபிடிப்பதற்காக அவை தற்போது தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக கூறப்படுவதுடன், சில தினங்களுக்கு முன்னர் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் அந்த இடத்தை தோண்டுவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப் படுகிறது.

இது மாத்திரம் போதுமானதல்ல, இவ்வாறாக விசாரணைகளில் சமூக அறிவியல் விடயங்களும் உள்ளடக்கப் படுவது அவசியம். அறிவியல் ரீதியான பரிசோதனைகளின்போது முடிவுகளை உறுதிப்படுத்தி கொள்வதற்காக, சமூக சாட்சியங்களும் பெரும் உதவியாக அமையும். இந்த வதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு உயிர்தப்பி இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இந்த முகாமில் வைத்துக் காணாமல் போனவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் இந்த முகாமில் பணியாற்றிய ஷ்தைரியமான பாதுகாப்புப் படையினர் ஆகியோர் வழங்கக் கூடிய சாட்சியங்களே இந்த உதவியாகும். 88,89 ஆம் ஆண்டுகளில் கடத்திச் செல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்களை கண்டறிவதற்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையில் மாத்தளை பிரதேசம் தொடர்பில் முக்கியமான சாட்சியங்கள் பதவிசெய்யப்பட்டுள்ளன.

சுமார் 50 பேருடைய எலும்புகள் மாத்தறை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் கிடைத்துள்ளதாக ,சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன. அத்துடன் இந்த மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கும் மேல் கடந்துள்ளது. எனினும் இது குறித்து சமூகத்தின் ஆர்வத்தையோ, ஆய்வு ரீதியான தேடுதல்களையோ, காணமுடியவில்லை. ஜனநாயக சமூகத்தில் என்றால் இந்த கொலைகளுடன் தொடர்புடைய முகாம்களில் கொலை செய்யப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் உறவினர்களின் மரபணு, பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டு அந்த உடல் பாகங்கள் உரிய முறையில் அடக்கம் செய்வதற்காக உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



ஊடகர்-சுனந்ததேசப்பிரிய

அத்துடன் கொலைகள் தொடர்பான விசாரணைகள் புதிதாக ஆரம்பிக்கப் படும். நாம் எந்தளவுக்கு இந்தவிடயத்தில் பின்தங்கியுள்ளோம்?

நடனமாடும் பெண் மற்றும் நாக பாம்புக்கு வழங்கிய முக்கியத்துவத்தை இலங்கை ஊடகங்கள் இந்த மாத்தளை எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டதற்கு வழங்கவில்லை. கைது செய்யப்பட்டு கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் சுமார் 50 இளைஞர், யுவதிகளின் எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை ஊடகங்கள் உரிய முக்கியத்துவத்தை கொடுக்காததன் மூலம் நாம் எந்தளவு உணர்வற்றிருக்கின்றோம் என்பதை காணமுடிகிறது.

இந்த மனித புதைகுழியானது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எதிர்க் கட்சியில் இருக்கும் போது, கண்டுபிடிக்கப் பட்டிருந்தால் அவர் என்ன செய்திருப்பார்? சிலநேரம் எலும்புகள் மீட்கப் பட்ட இடத்தில் கூடாரம் ஒன்றை அமைத்து, காணாமல் போனவர்களின் பெற்றோரை அழைத்து, இந்த எலும்புகள் எந்தப்பிள்ளையின் எலும்பு என்பதை தேடிக் கொண்டிருந்திருப்பார். எனினும் அவர் இதனை செய்ய முடியாமைக்கான வேறு காரணங்கள் இல்லை. இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வன்னியில் உயிரிழந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு நியாத்தை வழங்கி, நீதியை வழங்க வேண்டிய அதியாவசியம் ஏற்படும் என்பதே அந்த காரணமாகும். உரிமைகளுக்கு பதிலாக அடக்குமுறை மற்றும் கொலை என்பன வழிபாடாக மாறிப்போயுள்ள போருக்குப்பின்னரான இலங்கையில், எதார்த்தம் இதுதான். தமிழர்களுக்கு இல்லாத சுதந்திரம் சிங்களவர்களுக்கும் இல்லை.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித விரோத செயற்பாடுகளை புறந்தள்ளிவிட்டு எதிர்காலத்தில் அவ்வாறான மனிதத்தன்மையற்றவை நிகழாமல் இருப்பதை உறுதி செய்து, மனித உயிர்களுக்கு உரிய மதிப்பை அளித்து, மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சமூக முன்னுதாரணத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற போதிலும், போருக்கு பின்னரான இலங்கையில், மிரட்டல், கொலை, கலாசாரம் போன்றவையே முன்னுதாரணங்களாக இருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலையில் மாத்தளையில் புதைக்கப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு நியாயம் நிறைவேற்றப்படும் என்பதை எப்படி எண்ணிப்பார்க்க முடியும்?

குளோபல் நெற் நியூஸ்-
சுனந்த தேசப்பிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 13 ஆம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் - 20.12.2012


## குழந்தையின்மையா? கவலை வேண்டாம் உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு- முழுமையாக குணமடைய உலகிலேயே NO:1 வைத்தியம்







**குழந்தையின்மை** - குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது.

**சர்க்கரை நோய்** - இந்த நோய்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள்.மனித உடம்பில் சுரக்கின்ற இன்சுலின்கள் சரியாகசுரக்காமையே காரணம். இதன் காரணமாகவே இரத்தத்தில்உள்ள சர்க்கரையின் அளவு தானாகவே கூடிவிடுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எங்களது தெய்வீக மூலிகை மருத்துவத்தின் மூலம் இரத்தத்தில் உள்ள அளவை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி செயலிழந்த கணையத்தை மீண்டும் செயல்படச் செய்து அதிலிருந்து இரத்தத்திலஉள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி செயலிழந்த கணையத்தை மீண்டும் செயல்படச் செய்து அதிலிருந்து சுரக்கின்ற இன்சுலினை முழுமையாகச் சுரக்கச்செய்கின்றோம். உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி செயலிழந்த கணையத்தை மீண்டும் செயல்படச் செய்து அதிலிருந்து சுரக்கின்ற இன்சுலினை முழுமையாகச் சுரக்கச்செய்கின்றோம். இதன் காரணமாக மீண்டும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கூடுவதில்லை. இங்கு சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சிக்கு நல்ல முறையில் குணமடைய சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

**சிறுநீரகப்பிரச்சனை** - சிறுநீரகப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மற்ற டாக்டர்களால் கைவிடப்பட்ட ஒரு பக்க மற்றும் இருபக்க கிட்னியும் தோல்வி அடைந்தவர்கள் கூட எங்களது சிகிச்சையால் பலன் பெற்று வருகிறார்கள்.

**மூலநோய்** - மூல நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை செய்தும் பலம் அடையாதவர்கள் இரத்தம் வடிதல், வலி, எரிச்சல், மலம் கழிக்க முடியாமை போன்ற பிரச்சனைகளில் இருந்து விரைவில் குணமடைந்து மூல நோயை முற்றிலும் அகற்ற முடியும

**சொரியாசிஸ்** - தலையில் பொடுகு போன்று ஆரம்பித்து உடல் முழுவதும் பரவி மீன்செதில் போன்று தோன்றும். நாட்கள் ஆக ஆக உடலின் தோல்கள் இறுகி வெடித்து இரத்தம் வடியும். நகங்கள் சொத்தையாகும். இந்த நோய் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவக்கூடியது. இந்த நோயை எமது சிகிச்சை மூலம் முழுமையாக குணமாக்கலாம்.

சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்


பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

**ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

**செல்: 0091 9842457673**
**இலங்கைச் செல்: 0754154364**



## இலகுவான, இலாபகரமான சமையலுக்கு aves மின்காந்த அடுப்புக்கள்




2000/= தள்ளுபடி அல்லது 5 set பாத்திரம் இலவசம்

aves™ INDUCTION COOKER & KITCHEN APPLIANCES
Mfg : ISO 9001:2008 COMPANY

இது மின்காந்த அலைகள் (Magnetic Waves) மூலம் செயற்படுவதனால் தீ இல்லை, புகை இல்லை, A/C அறையிலும் சமைக்கலாம்.

எரிவாயுவுடன் ஒப்பிடும் போது 50% இலாபகரமானது, அத்துடன் விரைவாகவும் சமைக்கலாம்.

ஒரு நாள் சமையல் செலவு ஒரு அலகு (1 Unit) மின்சாரம்.

100% மின்சார அபாயம் அற்றது.

குறிப்பு: CHINA மின்காந்த அடுப்புக்களை எம்மிடம் 3990/= விற்கு பெற்றுக்கொள்ளலாம்.*

ஒரு வருட உத்தரவாதத்துடன் மேலும் இரண்டு வருட இலவச சேர்விஸ்



**Hotline 0772 35 95 35**

Imported & Distributed by;
**AP KITCHEN LAPTOP™**
இல. 98, காலி வீதி, கொழும்பு- 06. Tel: 011 2364696, 011 4255565
124D, பலாலி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 4749

VISA MasterCard
0% Easy Payment For Credit Card Holders
*conditions Apply

APGraphic


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்க வேண்டும்

## ஐ.தே.க. வலியுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் பல பாகங்களிலும் பெய்து வருகின்ற அடைமழையை அடுத்து ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கினால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனால் தேசிய அவசர நிலைமையை பிரகடனப்படுத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளத்தால் 30 ஆயிரம் குடும்பங்களும் ஒரு இலட்சம் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ இயற்கைக்கு எதிராக போராட முடியாதென்பது உண்மையேயாயினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும்.

அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீரையோ உணவையோ வழங்கவில்லை. ஆனால், ஊடக அறிக்கைகள் இதற்கு மாறாக உள்ளன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்ட வேகத்தையும் அதேசமயம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பூரணமாக உதாசீனம் செய்வதையும் என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அதேசமயம் செல்வந்த மேட்டுக்குடியினருக்காக 200 மில்லியன் ரூபா செலவில் கொழும்பு இரவு பந்தயத்தை நடத்தியதன் பின்னாலுள்ள தர்மம் யாதெனவும் அவர் கேட்டார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை மாதிரியாக வைத்தேதான் இதனை கூறி வருகிறேன். அத்துடன் இப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நிவாரணம் வழங்கப்படவில்லை.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணையில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கை தயாரிப்பதில் காட்டிய வேகத்தை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் அரசாங்கம் காட்ட வேண்டும். இரவு கார்ப்பந்தயத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பரலம்போகினி வகைக் கார்களில் இறக்குமதிக்கு வரிச்சலுகைகளை வழங்கி நாட்டுக்கு வரவேண்டிய வரி வருமானத்தை கிடைக்காமல் செய்து விட்டது.

சகல வளங்களையும் வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபடுத்த தேசிய நிலைமையை பிரகடனப்படுத்த வேண்டும் என்றார். (அ-2)

## போலி அனுமதிப் பத்திரத்தை விற்ற இலங்கையர் கைது

இந்திய பிரஜைக்கு போலி வேலை வாய்ப்பு அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்த இலங்கையர் குவைத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரத்தையும் தலா 530 குவைத்தினாருக்கு விற்றதாக இலங்கையர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்திய பிரஜையால் இது குறித்து குவைத் பொது குடிவரவு திணைக்களத்திடம் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இலங்கையர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இலங்கை பிரஜையிடம் குவைத் பொலிஸார் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# முல்லை. நகர்ப்பகுதியில் கட்டாக்காலி மாடுகள்

## நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பிரதேசத்தில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பொதுமக்கள் கூடுகின்ற முல்லைத்தீவு நீதிமன்றம்,பொதுச் சந்தைகள், பொலிஸ் நிலையம், மாவட்ட செயலகம், பிரதான வீதிகள் ஆகியவற்றிற்கு முன்னால் நூறுக்கு மேற்பட்ட கட்டாக்காலி மாடுகள் நடமாடுகின்றன.

இதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதோடு பொது இடங்களையும் அசுத்தம் செய்கின்றன.

குறிப்பாக விவசாயத்தை நம்பி வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் விவசாயிகளின் விவசாய நிலங்கள் இக்கட்டாக்காலி மாடுகளால் நாசமாக்கப்படுகின்றன.

இது தொடர்பாக கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு பலமுறை தெரிவித்தும் எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என குற்றம் சுமத்தப்படுகிறது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-267)

# நீதிமன்ற கட்டமைப்பு வீழ்ச்சி சட்ட ஒழுங்கை சீர்குலைக்கும்

## முன்னாள் நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்தால் மிலேச்சத்தனமான சமூகமொன்று உருவாகும் என உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் பீ.பி.வராவெவ தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். தனிப்பட்ட ஓர் நபரைச் சுற்றி அதிகாரங்கள் குவிக்கப்படுவது ஆபத்தானது. நீதிமன்றம், நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கும் இடையில் சமனிலையை பேண வேண்டும்.

நீதிமன்றக் கட்டமைப்பில் வீழ்ச்சி ஏற்பட்டால் நாட்டின் சட்டம் ஒழுங்கு சீர்குலையும். நாட்டின் அனைத்து மக்களும் செல்லக்கூடிய ஒரே இடம் நீதிமன்றமாகும்.

அந்த நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரச ஊடகங்களில் பிரதம நீதியரசருக்கு எதிராக சேறு பூசப்படுகின்றது.

இவ்வாறு அதிகளவில் பிரதம நீதியரசர் நிந்திக்கப்பட்டால் பொதுமக்கள் இந்த செயலின் இரகசியம் என்ன என கேள்வி எழுப்புவார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச முடியாது. செவிப்புலனற்றவர்களைப் போன்றே செயற்படுகின்றனர் என வராவெவ குறிப்பிட்டுள்ளார். (அ-2)


தடைகள் பல கடந்து 14 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் வலம்புரியை வாழ்த்துகின்றோம்.



மணமகன், மணமகள்

1000 பதிவுகளைத் தாண்டி..

கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்) எனும் முகவரியில் இயங்குகிறது



சமய, சமூக வேறுபாடின்றி பதிவுகள் நடந்தவண்ணமுள்ளன.

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே...!

செவ்வாய்க்கிழமைகளில் விடுமுறை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்திருமண தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

தொடர்பு:-021 720 1005

E-mail: kalyanamalaijaffna@gmail.com



2013 இற்கான புதிய அனுமதிகள்

BBC ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

11 வது வருடத்தில்

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

இப்பொழுது பெற்றோர்களின் வசதி கருதி எமது சில வளாகங்கள் இடமாற்றப்பட்டுள்ளன.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graduation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம்: மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். | நீர்வேலி: அரச வீதி |
| கோப்பாய்: பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி | சாவகச்சேரி: சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை |
| மானிப்பாய் 1: ஆலடிச்சந்தி, யாழ் வீதி | அச்சுவேலி: ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2: சங்கரப்பிள்ளை வீதி | சங்கானை: பிரதேச செயலகம் அருகாமை |
| சுன்னாகம்: Dr. சுபாரத்தினம் வீதி சுன்னாகம் | வடமராட்சி: பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

சனி, ஞாயிறு மற்றும் வார நாட்களில் ஆங்கில வகுப்புகள்

| | |
|---|---|
| Certificate in English | இலக்கணம், பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு |
| Diploma in English | G.C.E (O/L), (A/L) பூர்த்தி செய்தோர் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு |
| ESOL A1, A2 | Sponsor Scheme ஊடாக வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு |
| IELTS | உயர் கல்வி கற்கவும், வெளி நாடு செல்ல விரும்புவோருக்கும் |

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள்

- ★ Pre Foundation
- ★ Foundation
- ★ Level 1,2,3,4

பாடசாலை பாடத்திட்டத்திற்கமைய ஆங்கில பாடநெறிகள்

British BUSINESS COLLEGE

BRITISH BUSINESS COLLEGE

64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Tel:021 222 5796, 077 362 7055

British Council இனால் அங்கிகரிக்கப்பட்ட பரிட்சை பதிவு நிலையம்.

Registered as an Education & Training Company with the Registrar of Companies - Sri Lanka. Reg. No: P 9718


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையை தியாகம் செய்யாதே. ~சுவாமி விவேகானந்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## கண்ணபரமாத்மா வலம்புரி சங்கை எடுத்து சங்கநாதம் செய்தது ஏன்?

எங்கள் அன்புக்கும் பாசத்திற்கும் மரியாதைக்கும் உரிய வாசகப் பெருமக்களே! உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை பதின்மூன்று என்ற செய்தியோடு உங்களை சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

நீங்கள் தந்த அளவுகடந்த ஆதரவும் அன்பும் பாசமுமே பதின்மூன்று ஆண்டுகளில் வலம்புரி தனக்கென தனியான ஒருஇடத்தை பிடித்துக் கொண்டது என்ற உண்மை ஒருபோதும் மறப்பதற்குரியதல்ல.

யாழ்ப்பாண மண்ணில் கடந்த 13 ஆண்டுகள் என்பது சாதாரணகாலமல்ல.

இராமபிரான் 14 ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டார்.

ஆனால், நாங்கள் 13 ஆண்டுகளாக கல்லையும் முள்ளையும் கடந்து அடர்ந்த காட்டு வழியே நடந்துகொண்டிருக்கிறோம்.

எங்களோடு இருவழித் துணைகள். அதில் ஒன்று வாசகர்களாகிய உங்களின் ஆசிர்வாதமும், வாழ்த்துமடங்கிய அன்பு என்ற மகத்தான சக்தி.

மற்றையது நாம் இடையறாது தொழுகின்ற இறைபரம்பொருள்.

இந்த இரு சக்திகளும் எங்கள் அருகில் இருக்கும்வரை வலம்புரிக்கு எந்தக் குறையும் இல்லை என்பதை வலம்புரி குடும்பம் உரக்கச் சொல்லும்.

அன்பு வாசகர்களே! குருஷேத்திரப் போர் நடக்கப்போகிறது.

கண்ண பரமாத்மா தனது கரத்தில் இருக்கும் வலம்புரி சங்கை ஊதி சங்கநாதம் செய்கிறார்.

குருஷேத்திரத்தில் ஒலித்த அந்த வலம்புரி சங்கநாதம்தான் அதர்மத்தை தோற்கடித்து தர்மத்தை நிலைநாட்டியது.

இந்த உலகில் மக்கள் வாழவேண்டிய தர்ம வழியை எடுத்தியம்பும் பகவத்கீதையை குருஷேத்திரமே எமக்கு ஈந்தளித்தது என்ற உண்மையை தெரியாதவர்கள் இருக்க முடியாது.

13ஆண்டுகள் நாம் நடந்த பாதையில் எங்கள் மக்கள் பட்ட துன்பங்கள் படுகின்ற வேதனைகள் கண்டு வலம்புரி கலங்காத நாளில்லை.

அதேநேரம் எங்கள் மக்களின் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதற்காக வலம்புரி சங்கநாதம் ஒலித்தது. ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

போர்க் களத்தில் எங்கள் இனம் இழந்தவை ஏராளம். அந்த இழப்புகள் சாதாரணமானவையல்ல.

ஆனாலும் அந்த இழப்புகளை தமக்கு சாதகமாக்கிக் கொள்கின்ற கயமை கண்டு வேதனை தாளமுடியாமல் விக்கித்துப்போன நாட்கள் நிறையவே உண்டு.

எங்கள் மண்ணில் தர்மம் நிலை பெற வேண்டுமாயின்-நாம் இழந்தவை அர்த்தமுடையவையாக மாறவேண்டுமாயின் மனிதர்களை -அரசியல் தலைமைகளை இனங்காணுகின்ற தகைமையை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அன்னை இந்திரா காந்தியை சுட்டவன் அவரின் பாதுகாப்பு பணியாளன். மகாத்மா காந்தியை சுட்டவன் ரகுபதி ராகவ ராஜாராம்... என்று உச்சாடனம் செய்யக்கூடிய ஒருவன்.

ஆகையால், எங்களுக்கான நண்பர்கள், எதிரிகள் பக்கமும் இருப்பார்கள். எங்கள் நண்பர்கள் பக்கத்தில் எங்களுக்கான பரம எதிரிகளும் இருப்பார்கள் என்ற உண்மையை உணர்ந்து செயற்படுவோமாக இருந்தால்,

எங்களுக் கானவற்றை நாம் எளிதில் பெற்றுக் கொள்ள முடியும். இது சத்தியம்.

# கூட்டமைப்பு தவிசாளரின் வாகனம் தீயிட்டு எரிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் சி.குணரத்தினம் என்பவரது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனம் ஒன்றை இனம்தெரியாத குழுவினர் தீயிட்டு எரித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தவிசாளர் சி.குணரத்தினம் தெரிவித்துள்ளார்.

மத்தியமுகாம் 11-ம் கொலனியில் உள்ள அவரது வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்ட பிக்கப் வாகனமே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பிரதேச சபை தவிசாளர் சி.குணரத்தினம் தெரிவிக்கையில்,

பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மழை வெள்ளத்தினால் கல்முனை மற்றும் பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

எனவே படகுச்சேவை தொடர்பாக அவசரக்கூட்டம் நேற்று பிற்பகல் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்திற்கு செல்ல வேண்டிய நிலையில் வாகன சாரதி லீவு காரணமாக நானே பிக்கப் வாகனத்தை சபை வாகன புத்தகத்தில் பதிந்துவிட்டு எடுத்துச் சென்றேன்.

கூட்டம் இரவு 8.45 மணிக்கு முடிபடைந்துள்ள நிலையில் வாகனத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்று வீட்டின் முன் நிறுத்தி விட்டு வாகனத்தை பாதுகாக்க மாமனாரை அமர்த்திவிட்டு நித்திரைக்குச் சென்றேன்.

இந்நிலையில் அதிகாலை 1.30 மணியளவில் இனந்தெரியாத குழுவினர் வாகனத்தை சுற்றி பெற்றோல் ஊற்றி தீயிட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் வாகனம் தீப்பற்றி எரிவதைக்கண்ட மாமனார் சத்தம் போட்டதையிட்டு, அயலவர்களின் உதவியுடன் தீயை அணைத்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தோம்.

இப்பிரதேச சபைக்கு தவிசாளராக என்னை நியமித்தமைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த சபை உறுப்பினர் ஒருவரின் குழுவினரே இந்த வேலையை செய்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## மீன் மழையை அடுத்து நேற்று இறால் மழை

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸ மஹாராம விகாரைப் பகுதியில் நேற்று இறால் மழை பெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக நாட்டில் சில பகுதிகளில் சிவப்பு மழை பெய்து வருகின்றது. தொடர்ந்து மீன் மழை, ஜெலி மழை என வியத்தக்க வகையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது மக்களை அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு களுத்துறை, பான மிரிஸ்வத்த பகுதியில் மஞ்சள் நிறமழை பெய்துள்ளது.

இம் மஞ்சள் நிற மழை சேரிக்கப்பட்டு, இது குறித்த பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# கஞ்சா குற்றச்சாட்டில் கைதானவருக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

4கிலோ 200 கிராம் கஞ்சாவினை வைத் திருந்த குற்றச்சாட்டில் கைதாகி 7 மாதங்களாக விளக்கமறியலில் இருந்த நபருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

வைகாசி மாதம் 9 ஆம் திகதியன்று மாதகல் பகுதியில் உரிய அனுமதிப்பத்திரமின்றி 4.2 கிலோக்கிராம் கஞ்சாவினை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் தெல்லிப்பழையினைச் சேர்ந்த இராசரத்தினம் ரமின் என்பவர் இளவாலை பெரலிஸ் நிலைய அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இவர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்றையதினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது சந்தேக நபர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணியால் விண்ணப்பிக்கப்பட்டிருந்த பிணை விண்ணப்பம் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதில் எதிரியை 25 ஆயிரம் ரூபாய் காசப்பிணையிலும் ஒரு இலட் சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட் பிணையிலும் செல்ல ஆணையாளர் அனுமதித்தார்.

மேலும் பிணை நிற்பவர்கள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவர்கள் எனவும் நிரந்தர வருமானத்தினை கொண்டவர்கள் எனவும் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

எதிரியோ அல்லது பிணையாளியோ வதிவிடம் மாறும் போது மேல் நீதிமன்ற பணியாளருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.


எதிரிஷை ஒவ்வொரு மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையன்று இளவாலை பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடல் வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இதில் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி முடியப்பு றெமீடியசும் சட்டமா அதிபரினை பிரதிபலிக்கும் வகையில் அரச சட்டவாதி செல்வி நளினி கந்தசாமியும் ஆஜராகி இருந்தனர். (எ-4)

## சத்திய தரிசனம்




கையில் அணுகுண்டை வைத்துக்கொண்டு அமைதியைப் பற்றி சொற்பொழிவாற்றி அமைதியின் தேவை பற்றி ஆணித்தரமாகப் பேசுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சந்திரனுக்கு வேண்டுமானால் செல்லலாம். ஆனால் ஒருபோதும் அமைதியும் ஆனந்தமும் அடைய முடியாது. அமைதியை வெளிப்புற உலகில் தேடுவதில் அர்த்தமில்லை. வெளிப்புற உலகில் காண்பதெல்லாம் பதற்றங்கள்தான். அமைதி உன்னுள் இருக்கிறது. அது உன் வடிவம். அதனை உன்னுள்ளிருந்து வெளியே கொண்டுவர முயற்சி செய்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வைகுண்ட ஏகாதசி அன்று பெருமாள் ஆலயங்களுக்கு சென்றுவந்தால் துன்பம் தீருமா? ஏன்



மார்கழி மாதம் வருகின்ற ஏகாதசிக்கு வைகுண்ட ஏகாதசி என்று பெயர். சகல விஷ்ணு ஆலயங்களிலும் சொர்க்கவாசலைத் திறந்து வைப்பர். அதில் நுழைந்து வந்தால் சகல பாக்கியங்களும் நமக்குக் கிடைக்கும். ஸ்ரீரங்கம் விஷ்ணு ஆலயத்தில் இலட்சக்கணக்கான மக்கள் சொர்க்கவாசலில் நுழையக் காத்திருப்பர். அருகிலுள்ள விஷ்ணு ஆலயத்திற்கு ஏகாதசியன்று சென்று அதிகாலையில் விஷ்ணுவை வழிபட்டு அங்குள்ள சொர்க்கவாசலில் நுழைந்துவந்தால் சிக்கல்களும் தீரும். ரொக்கமும் சேரும், சொர்க்க மும் கிடைக்கும்.

அன்று தினம் முழுநாளும் விரதமிருந்து இரவு முழுவதும் விழித்திருந்து அவல் நைவேத்யம் வைத்து பெருமாளுக்கு வைத்த அவலை நாம் சாப்பிட்டால் நமது ஆவல்கள் அனைத்தும் நிறைவேறும். மறுநாள் துவாதசியன்று அன்னம் வைத்து உண்டு முறைப்படி விரதத்தைப்பூர்த்தி செய்யவேண்டும்.

குசேலனைக் குபேரனாக மாற்றியநாள் வைகுண்ட ஏகாதசி அன்றுதான். நாமும் பெருமாளை வணங்கி அவருடைய அருளைப் பெறுவோம்.

#### ஏகாதசி நாளில் முழு உபவாசமா?

விரதங்கள் தூய்மையானதாகவும் பாவம் நீக்குவதாகவும் கருதியிருந்த பண்டைய மக்கள் அதன் பலன்களை முழுமையாக அனுபவிக்க ஏகாதசி விரதத்தைக்கைக்கொள்ளும் போது அந்நாளில் முழு உபவாசமிருக்க வேண்டும் என்று போதித்திருந்தனர்.

இது உடலுக்கும் மனதுக்கும் நன்மை செய்யும் என்றும் இந்நாளில் முழுக்கவனத்துடன் பிரார்த்தனை செய்தால் மனது ஒருநிலைப்படும் என்று இன்றைய தலைமுறையும் கண்டறிந்துள்ளது. ஆனந்தபக்ஷம், பூரிபக்ஷம் என்று இரண்டுவகை ஏகாதசி விரதகாரர்களுண்டு. ப்ரோஷ்டபத ஏகாதசி, பரிவர்த்தன ஏகாதசி, மாகசுக்ல ஏகதாசி, பீம ஏகாதசி என்பவையே முக்கிய ஏகாதசிகள். ஒருநாளில் ஏகாதசி திதி ஆறு நாழிகை உண்டானால் ஏகாதசியைக் கணக்கிலெடுக்கலாம். ஆனால் அன்று தசமிதிதி சிறிதளவும் இருக்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன்பள்ளிசிறார்களுக்கிடையிலான கதைகூறல், விவேகத்திறன அறியும்போட்டி, ஆக்கச்செயற்பாடு ஆகியன அண்மையில் நடத்தப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட கொக்குவில் மகிழ் முன்பள்ளி சிறார்களை முதல் இரண்டு படங்களிலும் திருநெல்வேலி அபிராமி முன்பள்ளி சிறார்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.





யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் சிங்களக் கற்கை நெறியினை மேற்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கல் மற்றும் சுதேச மருத்துவ மாணவமலர் நூல் வெளியீட்டு விழா ஆகிய நிகழ்வுகள் கடந்த 6ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் நூல்வெளியிட்டு வைக் கப்படுவதையும் மாணவன் ஒருவருக்கு சான்றிதழ் வழங் குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: மல்லாகம் செய்தியாளர்)



கோப்பாய் ஆசிரிய கலாசாலை இந்து மாமன்றத்தின் ஆதரவுடன் ஆன்மீக எழுத்தாளர் சிவயோகமதி கந்தவனம் எழுதிய அருளாளர் தொண்டு நூலின் வெளியீட்டு விழா அண் மையில் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் கலாசாலையின் பிரதி அதிபர் வீ. கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந் துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் நூலை வெளியிட்டு வைக்க யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத் சைதன்ய சுவாமி பெற்றுக்கொள்வதையும் நடுவில் நூலாசிரியர் அருகில் கலாசாலை பிரதி அதிபர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.





பளை பிரதேச செயலர் பிரிவின் ச[illegible] வதேச மாற்றுவலுவுள்ளோர் தினவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் நிற் பதையும் மாற்றுவலுவுள்ள ஒருவ ருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களை யும் படங்களில் காணலாம்.

## நிகழ்வின் நிழல்கள்




கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழக நிதி அனுசரணை யில் கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலைய அங்கத்துவ குடும்ப மாணவர்களுக்கான பாட சாலை உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் நிலையத் தலைவர் இ.கந்தசாமி தலைமை யில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர் சி.மதிய ழகன் உரையாற்றுவதையும் மாணவி ஒருவருக்கு உபகரணப் பொதி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.







திசைகாட்டி நிறுவனத்தின் இலவச ஆங்கிலக் கல்விக் கருத்தரங்கு கடந்த 16 ஆம் திகதி திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பௌத்தமதகுரு அதிவண.மைக்கேல் கருத்துரை வழங்குதையும் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களையும் படங் களில்காணலாம். (படங்கள்.: உ..சாளின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிட்சர்லாந்தின் சிறந்த வீரர் விருதை வென்றார் ரோஜர் பெடரர்



சுவிட்சர்லாந்தின் 2012-ம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீரராக டென்னிஸ் நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு நிபுணர்கள், பொதுமக்கள் அனைவரும் ஓட்டு போட்டு 43.9 சதவிதம் என்ற அடிப்படையில் இவருக்கு இவ்விருது கிடைத்துள்ளது.

உலகத்தரவரிசையில் இரண்டாம் இடத்தில் உள்ள இவர் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்.

இந்த விருதை அவர் 5-வது முறையாக பெறுகிறார். இதற்கு முன்னர் 2003, 2004, 2006, 2007 ஆகிய வருடங்களில் பெற்றுள்ளார்.

இவருடன் இவ்வாண்டுக்கான விருதை ஒலிம்பிக் டிரையத்லானில் தங்கப்பதக்கம் வென்ற சுவிஸ் வீராங்கனை நிகோலா ஸ்பிரிக்கும் பெற்றார்.

# இந்தியாவின் அதீத நம்பிக்கை தோல்விக்கு வழிவகுத்தது

-நஷீர் ஹூசைன்



போலித் துணிச்சலினாலும் ஆர்ப்பாட்டத்தினாலும் இந்திய அணி தோற்றதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் நஷீர் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகள் கொண்ட தொடரை இந்திய அணி 1:2 என்ற கணக்கில் சொந்த மண்ணிலேயே இழந்தது.

இது குறித்து நசீர் ஹொசைன் கூறுகையில் முன்பிருந்ததைப் போன்ற இந்திய அணி தற்போதில்லை. இரு அணிகளிலிருந்தும் ஓர் அணியை தெரிவு செய்ய விரும்பினால் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் அனைவரையும் தெரிவு செய்வேன்.

இங்கிலாந்து அணி முதல் முறையாக இந்தியாவில் வைத்து இந்தியாவை விடச் சிறந்த சுழற்பந்து வீச்சை வெளிப்படுத்தியது.

டெஸ்ட் கிரிக்கெட் மீது இங்கிலாந்துக்கு அபரிமிதமான ஆர்வமிருப்பதை இந்த வெற்றி காட்டிநிற்கிறது. இங்கிலாந்து அணியின் வீரர்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் உறுதியுடன் காணப்பட்டனர்.

ஒரு போட்டியில் வென்றவுடன் சுழலும் ஆடுகளத்தை தயாரித்தால் போதும் இங்கிலாந்தை வீழ்த்திவிடலாம் என்று இந்தியா நினைத்து விட்டது என்றும் போலித் துணிச்சல், அதீக ஆர்ப்பாட்டத்தினாலேயே இந்திய தோல்வியடைந்தது எனவும் கூறியுள்ளார்.

## இராணுவத் ...

இடையில் நேற்று மாலை சந்திப்பொன்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இராணுவ தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதுடன் இருவருக்கிடையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. அத்துடன், இராணுவ தலைமையகத்துக்கு விஜயம் செய்த ஜெனரல் பிக்ரம் சிங், இலங்கை இராணுவ வீரர்களால் வழங்கப்பட்ட அணிவகுப்பு மரியாதையினையும் ஏற்றுக் கொண்டார்.

நீண்டகாலமாக இருநாட்டு இராணுவங்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஜெனரல் பிக்ரம் சிங் உள்ளிட்ட ஐவரதும் விஜயம் அமைந்துள்ளது என இராணுவத்தலைமையகம் தெரிவித்தது.

இந்திய இராணுவ நலன்புரிச் சங்கத்தின் தலைவியும் ஜெனரல் பிக்ரம் சிங்கின் பாரியாருமான சுர்ஜீட் கௌர், மேஜர் ஜெனரல் ரஜீவ் தெவாரி, கேணல் எஸ்.கே.ஆச்சார்யா, கேணல் எஸ்.சீ.தேவ்கன் மற்றும் கப்டன் ரஜீவ் மெத்திவ்ஸ் ஆகியோரே இந்த விஜயத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த தூதுக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாதுகாப்பு படைகளின் பிரதானி மற்றும் முப்படைகளின் தளபதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். (எ-1)

## தெரிவுக்குழு...

ஆகவே இந்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் பரிந்துரைகளை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை இன்றைய தினம் விசாரணைக்கு எடுப்பது என்று முடிவு செய்துள்ளது. (எ-1)

## குற்றப் பிரேரணை...

பிரகாரம் மீளவும் அதனை வாபஸ் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடையாது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளது.

பொதுவான ஆவணம் என்பதால் கட்டணத்தை செலுத்தி நாட்டின் எந்தவொரு பிரஜையும் இந்த அறிக்கையை பெற்றுக் கொள்ள முடியும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்தப்பட உள்ளதாகவும் இதில் பிரதம நீதியரசர பணி நீக்க வேண்டுமென மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்தினால் அது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு சென்று பிரதம நீதியரசரை பணி நீக்கம் செய்வார் என சந்திம வீரக்கொடி குறிப்பிட்டார். (எ-1)

## 43ஐ எட்டியது...

பெற்றுள்ளதாக ரி.கனகராஜ் தெரிவித்தார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் இதற்கான ஆவணங்கள் கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று கிடைத்த முறைப்பாட்டுடன் யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் மொத்தமாக 43 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதில் 39 முறைப்பாடுகள் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்பாகவும் நான்கு முறைப்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றுள்ளது.

நேற்றுக்கிடைத்த முறைப்பாட்டில் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தொடர்பாகவும், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரண்டு பேர் தொடர்பாகவும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தொடர்பாகவும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

## சொல்வதெல்லாம் உண்மை...

பாரியளவிலான பூமியதிர்வு மற்றும் விண்கல் வீழ்ச்சி ஆகியவற்றினால் இயற்கை அழிவுகளை அமெரிக்கா மற்றும் அரபிய நாடுகள் சந்திக்கும்.

2004-ம் ஆண்டு இலங்கையில் சுனாமி மற்றும் 2013-ம் ஆண்டில் விண்கற்கள் விழும் என்ற எச்சரிக்கை என்பவை தொடர்பில் 2001, 2002 ஆகிய ஆண்டுகளின் ஊடகங்களில் தாம் வெளியிட்ட செய்திகள் உண்மையாகியதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

2012-ம் ஆண்டு உலகம் அழியும் என்பது முற்றிலும் போலியான பிரசாரம் ஆகும். ஆனால் எதிர்வரும் 29-ம் திகதி பூமியதிர்ச்சி ஒன்று இலங்கையில் ஏற்படவுள்ளது. இதன்தாக்கம் இந்தியாவுக்கும் ஏற்படும். ஆனால் பாரியளவிலான பாதிப்புகள் ஏற்படாது.

பூமியின் மீது 2013-ம் ஆண்டு விண்கற்கள் விழும் என நான் 2001, 2002 காலப் பகுதியில் எதிர்வு கூறினேன்.

அதன்பின்னர் இது குறித்து ஆராய்ந்து நாசா உள்ளிட்ட அமெரிக்க விஞ்ஞானிகள் அக்கற்களை சிறு துண்டுகளாக உடைத்தெறியும் நடவடிக்கையில் இறங்கினர்.

அதேபோன்று, 2004-ம் ஆண்டு கடல்சார் பாரிய அழிவுகள் இலங்கையில் இடம் பெறும் என்று 2002-ம் ஆண்டிலேயே கூறினேன்.

அதற்கமைய 2004-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் திகதி பாரிய அலைகள் இலங்கையின் கரையோரப் பகுதியைத் தாக்கின.

இவ்வாறு எதிர்வு கூறிய அனைத்தும் எனது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட வகையிலேயே இடம்பெற்று முடிந்து விட்டன. எனவே நான் மிகவும் பொறுப்புடன் கூறுகின்றேன்.

2012-ம் ஆண்டில் உலகம் அழியாது. ஆனால் 29-ம் திகதி பூமியதிர்வு இலங்கையில் ஏற்படும்.

2019-ம் ஆண்டில் அமெரிக்கா மற்றும் அரேபிய நாடுகள் பாரிய இயற்கை அழிவுகளைச் சந்திக்கும் எனவும் திடமாகவும் கூறியுள்ளார் லலித் விஜயவர்த்தன. (எ-1)

## புலிகளும் ஜேவிபியும்...

யினரும் தமது போராட்டத்தின்போது தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் பிடித்து வைத்து அங்கு ஆட்சி நடத்தியவர்களாதன்.

எனவே இறந்துபோன ஜேவிபி போராளிகளை தெற்கில் நினைவு கூரும்போது, புலிப் போராளிகளையும் வடக்கில் நினைவு கூருவது தவறாக முடியாது. அந்த அடிப்படையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை சிறைபிடித்து, புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பியது ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டில் இரண்டு சட்டம் இருக்க முடியாது. இதனாலேயே யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகிறார்கள். இதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். மாணவர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

தனிநாட்டை புலிகள் கோரினார்கள் என்றால், இவர்கள் அதைவிட ஒருபடி மேலே போய் முழு நாட்டையுமே கோரினார்களே. இன்று இந்த தென்னிலங்கைப் போராளிகள்தான் இங்கே நினைவு கூரப்படுகின்றார்கள். அதற்கு அனுமதி இருக்கிறது. ஆனால், வடக்கில் இல்லை.

இதன் பின்னால் உள்ள காரணம், ஒன்றே ஒன்றுதான் இவர்கள் சிங்களவர்கள். அவர்கள் தமிழர்கள். ஒரே காரியத்தைச் செய்யும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் வெவ்வேறு தண்டனைகள். இதனால்தான் யாழ். பல்கலைக்கழக மாணவர்களை நள்ளிரவில் வீடு புகுந்து, திருடர்களை, மிருகங்களைப் பிடிப்பதைப் போல் பிடித்து இழுத்துச் சென்றுள்ளார்கள்.

இதை உலகம் ஒருபோதும் ஏற்காது. இன்று சிறைகளில் ஆயிரம் தமிழ் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு பொது மன்னிப்பு அல்லது பிணை வழங்குங்கள் என்று சொன்னோம். முடியாவிட்டால், ஐந்து முதல் பதினைந்து வருடங்கள் சிறை வாழ்க்கை வாழும் இவர்களை புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி புனர்வாழ்வு பயிற்சியளித்து பின்னர் அவர்களது குடும்பங்களுடன் அவர்களைச் சேர்த்து விடுங்கள் என்று சொன்னோம்.

இதைச் செய்யாத இந்த அரசாங்கம், இன்று நாட்டிலே குடும்பங்களுடன் வாழ்ந்து வந்த மாணவர்களை பிடித்து வந்து புனர்வாழ்வு முகாம்களில் அடைத்து வைத்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு காரணம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆவார்.

புலிப் பயங்கரவாதத்திற்கு எதிராகவே இந்த மாணவர்களைப் பிடித்து வந்துள்ளோம் என பாதுகாப்புச் செயலர் சொல்கிறார். இந்த நாட்டில் இன்று புலியும் இல்லை. பயங்கரவாதமும் இல்லை. தெற்கில் ஜே.வி.பி இருக்கிறது.

பயங்கரவாதம் இல்லை. இருக்கும் ஒரே பயங்கரவாதம் அரச பயங்கரவாதம்தான். இது இன்று அரசியல் தலைவர்களையும், ஊடகவியலாளர்களையும், மாணவர்களையும், நீதிமன்றங்களையும் தாக்குகிறது.

இந்த அரச பயங்கரவாதம்தான் எதிர்காலத்தில் இந்த நாட்டில் வடக்கிலோ, தெற்கிலோ அரச அல்லாத பயங்கரவாதத்தை மீண்டும் உருவாக்க போகிறது.

பல்கலைக்கழக மாணவர்களை உடன் விடுதலை செய்யாவிட்டால், அது தீ போல பரவி அனைத்து பல்கலைக்கழகங்களையும் ஆக்கிரமிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை. இதை இந்த அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (எ-1)

## தொடரும் சீரற்ற கால...

கண்டி பதுளை வீதி, பதியப்பல வலப்பனை வீதி, புத்தளம்-சிலாபம் பிரதான வீதி நுவரெலியா செங்கலடி ஏ9 வீதி, பொத்துவில்-பாணமை வீதி மற்றும் நுவரெலியா-வெலிமட வீதி ஆகியவற்றில் வெள்ளநீர் நிறைந்துள்ளதாலும் மண்சரிவு ஏற்பட்டுள்ளமையினாலும் குறித்த வீதிகளினூடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் மூடப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த வீதிகளை வழமைக்கு கொண்டுவரும் பணிகளில் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளுடன் இணைந்து பொலிஸார் மற்றும் முப்படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்தக் காலநிலை சீர்கேடு காரணமாக 15 ஆயிரம் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டது. கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட லஹுகல, பொத்துவில், பாணம மற்றும் எலபட போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த விவசாய நிலங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அந்நிலையம் கூறியது.

இதுவரையில், 146 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் மேலும் 805 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதித் தலைவர் சரத் லால் குமார தெரிவித்தார்.

மேலும், வெள்ளம் காரணமாக ரயில் போக்குவரத்துச் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மலையக தபால் ரயில் சேவை, கொழும்பு ஓமந்தைக்கு இடையிலான ராஜரட்டரஜினி ரயில் சேவை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டிருக்கும் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்வடைந்துள்ளது.

மழை வெள்ளம் காரணமாக நாட்டில் எட்டு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் 16 பேர் பலியாகியும், 20 பேர் காயமடைந்தும் 13 பேரைக்காணவில்லை.

மழை, வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களினால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவிவரும் சீரற்ற கால நிலை தொடரும் என வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ, மத்திய மலைநாடு உள்ளிட்ட பல பகுதிகளில் தொடர்ந்தும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# CITY COLLEGE OF ENGLISH

## ENGLISH EXAMINATIONS

UNIVERSITY OF CAMBRIDGE

Would you like to achieve a certificate in English which is valid for life. If so, the Cambridge ESOL high level English language certificates are the best choice for you.

திருமணம் செய்த இலங்கையர்கள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரித்தும் பாடநெறி Ket (A1, A2) மட்டுமே

**KEY English Test**

A1, A2 U.K Settlement visa வுக்கான பரீட்சையை KET

KEY English Test நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் Reading and Writing Listening & Speaking. பரீட்சையில் 70% புள்ளிகள் பெற்று A2 Certificale 46 - 69 வரையிலா புள்ளிகள் பெற்றால் A1 Certificat கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 16th March 2013 |
| Application closing date | 20th January 2013 |
| Exam Fees | Rs 6300/= |

Leval B1 **Perliminary English Test**

PET Perliminary English Test இது ஓர் Intermediate Level பரீட்சையாகும் For those who want to use English for work and study நீங்கள் B1 தகுதியைப் பெறத்தவறமிடத்து A2 Certificate கிடைக்கும்

| | |
|---|---|
| Date of Exam | 16th March 2013 |
| Application closing date | 20th January 2013 |
| Exam Fees | Rs 7500/= |

வகுப்புகள் 02.01.2013 ல் ஆரம்பம்

| | |
|---|---|
| Course Schedule | Mon, Tue, Wed, Thu |
| Duration | 12 weeks |
| Time | Batch 1 10.30 - 12.30 |
| | Batch 2 03.00 - 05.00 pm |

Classes by: Cambridge ESOL Certified Trainer

# IELTS

BRITISH COUNCIL

## IELTS FOR UK STUDENT VISA APPLICANTS

We Provide
1. Examination Preparation Course Provider For British Council.
2. Cambridge Esol Certified Trainer
3. Materials approved by British Council which are quite new including Cambridge 8
4. Free IELTS pack & Mock Exams

02.02.2013 IELTS இல் யாழ்ப்பாணத்தில் பரீட்சைகள் நடைபெறும்.

அதற்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் இப்பொழுது நடைபெறுகின்றன.

## ESOL Diploma in English City & Guilds

U K விஸாவுக்கான A1 B1 English Courses புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | | |
|---|---|---|
| Course Schedule | Mon -Tue-Wed-Thu | 02.01.2013 |
| Duration | 2 Months (100 hours) | |
| Time | 8.30.10.30 a.m | |

For registration and further details contact

CITY COLLEGE OF ENGLISH

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.

Tel. 021 2220384 / 077 8803887


# திட்டமிட்டபடி...

மையப்படுத்திய கைது நடவடிக்கைககள் நிறுத்தப்பட வேண்டும்.

♦ தமிழர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்கள-முஸ்லிம் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)


புதிய முகவரி

ஹரன் ஜுவல்லர்ஸ்

நகை வைர வியாபாரிகள்

இல.217 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 6083, 0714182480


# மேலும் 2 மாணவி...

கழகத்தின் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முகாமைத்துவ பீடத்தின் இறுதி வருடத்தில் கல்வி கற்கும் ஒரு மாணவியும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கலைப்பீடத்தில் இறுதி வருடத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவருமாக இரு மாணவிகளே விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ் விசாரணை அழைப்பினை வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸார் பல்கலைக்கழக நிர்வாகத்தின் ஊடாகவும் தனிப்பட்ட ரீதியிலும் நேற்று அறிவித்துள்ளனர்.

இவர்கள் இன்று வவுனியாவிற்கு செல்லவுள்ளர்.

விடுதலைப் புலிகளின் மாவீரர்தினமான நவம்பர் 27ஆம்திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பெண்கள் விடுதியான ஆனந்த குமாரசாமி விடுதியில் மாவீரர் சுடர் ஏற்றிய சம்பவம் தொடர்பான விசாரணைக்காகவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு மாணவர்களும் குறித்த விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே இரண்டு மாணவிகளை வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (எ-4-11)


13ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வலம்புரியை வாழ்த்துகிறோம்...

நீங்களும் மின்இணைப்பாளராகலாம்

கட்டணம்: ரூ.11,500 Electrical wiring

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வருமானம் தரக்கூடிய 100% தொழில் உத்தரவாதம் வழங்கப்படும்

முதல் 10 பேருக்கு விசேட விலைக்கழிவு

(C-1819)

Electrical Engineer இன் வழிகாட்டலில்...
அடிப்படை முதல் தெளிவான விளக்கங்களுடன் பாடநெறி கற்பிக்கப்படுவதுடன் ஆய்வுகூடப் பயிற்சியையும் (Practical) உள்ளடக்கியது.

பாடநெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். முழுநேரம்/பகுதிநேர வகுப்புகள் உடனடியாக ஆரம்பம்

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728, 0777444225



13ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வலம்புரியுடன்...

NALIN Information Technologies Pvt Ltd.

நத்தார் தினத்தையும் புதுவருடத்தையும் முன்னிட்டு விசேட விலைக்குறைப்பு

hp DELL

**HP PRO 3330MT i3 DESTOP PC**
* intel Core i3 3.3 processor
* M/Board HP 61
* 4GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* HP DVD-Rw
* HP 19" LED Monitor
* HP USB Key Board,
* USB Optical Mouse
* Free DOS

.RS.73,000

**HP PRO 3330MT DUALCORE PC**
* intel Dual Core 2.7 processor
* M/Board HP 61
* 4GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* HP DVD-Rw
* HP 19" LED Monitor
* HP USB Kery Board,
* USB Optical Mouse
* Free DOS

RS.64,000/=

**HP PAVILION G6 NOTE BOOK**
* intel i5 2.5 processor(3rd)
* 4GB DDR3 Memory
* 750 GB SATA Hard Drive
* DVD-Rw
* Display 15.6" LED
* Blue Tooth, Wirless Lan
* Web cam, Mic
* Free Dos

Rs.86,000/=

1 year international warrenty

**DELL INSPIRON 3520 i5 NOTE BOOK**
* intel i5 2.5 processor
* 4GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* DVD-Rw
* Display 15.6" LED
* Blue Tooth, Wirless Lan
* Web cam, Mic
* Free Ubunthu

Rs.93,000/=

1 year international warrenty

**HP 630 i3 NOTE BOOK**
* intel core i3 3.3 processor
* 2GB DDR3 Memory
* 320 GB SATA Hard Drive
* DVD-RW
* Display 15.6" LED
* Blue Tooth Wirless lan
* Web cam,Mic
* Free DOS

RS.61,000/=

1 year international warrenty

**DELL INSPIRON 3520 i3 NOTE BOOK**
* intel i3 3.3 processor
* 4GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* DVD-Rw
* Display 15.6" LED
* Blue Tooth, Wirless Lan
* Web cam, Mic
* Free Ubunthu

Rs.75,000/=

1 year international warrenty

**ASSEMBLE i3 DESKTOP PC**
* intel Core i3 3.3 processor
* M/Board intel 61
* 4GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* Samsung DVD-Rw
* Samsung 19" LED Monitor
* Dex Casing, Power Supply 550w
* UPS Squt 650w
* POWER LOQIC Kery Board,
* POWER LOQIC Optical Mouse
* Free DOS

Rs.58,500/=

**ASSEMBLE DUAL CORE PC**
* intel Dual Core 2.7 processor
* M/Board intel 61
* 4GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* Samsung DVD-Rw
* Samsung 19" LED Monitor
* Dex Casing, Power Supply 550w
* UPS Squt 650w
* POWER LOQIC Kery Board,
* POWER LOQIC Optical Mouse
* Free DOS

Rs.49,800/=

**HP CO 43-400TU NOTE BOOK**
* intel Dual Core 2.6 processor
* 2GB DDR3 Memory
* 500GB SATA Hard Drive
* DVD-Rw
* Display 14" LED
* Blue Tooth, Wirless Lan
* Web cam, Mic
* Free DOS

Rs.52,000/=

1 year international warrenty

8GB Flash -950/=
16GB Flash -1,800/=
32GB Flash -3,900/=
DDR3 2GB Ram - 1,900/=
DDR3 4GB Ram - 2,900/=
Hard Disk 500GB -8,200/=
M/Board 41(DDR2&DDR3)-7,300/=
M/Board 61 -7,400/=
Multi Dongle From 3,200/=to 5,500/=

i7,5,i3 Processor 3Year Warranty

NALIN INFORMATION TECHNOLOGIES web - www.nit.lk

195/2, Parameswara Junction, Jaffna. T.P: 0212221121 / 0777667975


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



## ஊடகத்துறையில் ஓர் முத்திரை

வலம்புரி நாளிதழ் இன்று தனது 13 ஆவது அகவையை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பத்திரிகைத் துறையில் பல சாதனைகளை செய்து அனைத்து சாதனைகளையும் தனதாக்கி மக்கள் மனதில் தனக்கென ஒரு இடத்தை வகுத்து 13 வருடங்கள் பணியாற்றி தலைநிமிர்ந்து நிற்பதையிட்டு அனைவரும் மகிழ்ச்சியடைகின்றனர்.

பத்திரிகை தர்மத்தின்படி வழி நின்று நடுவுநிலை தவறாத நன்னெறி காத்து ஊடகத்துறையில் முத்திரை பதித்திருப்பதையிட்டு ஆசிரியர் தலைப்பு, அரசியல், சமய, சமூக, பொருளாதாரம், கல்வி அனைத்தையும் தனதாக்கிய வலம்புரி நாளிதழ் இன்னும் பல வளர்ச்சி கண்டு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம். இந்நற்பணியில் இணைந்திருக்கும் இயக்குநர், செய்தி ஆசிரியர், படப்பிடிப்பாளர் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்க பிரார்த்திக்கின்றோம். வலம்புரிக்கு எமது பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

**என்றும் வேண்டும் இன்ப அன்பு**

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்*
*இரண்டாவது குரு மஹா சந்நிதானம்*



## மனம் நிறைந்த வாழ்த்துக்களும் ஆசிகளும்

சூரியபகவான் உலகம் சுற்றிவருவது போல் வலம்புரி நாளிதழ் மக்கள் சிறந்து வாழ்கின்ற இடங்கள் எல்லாம் அவர்களின் கரங்களில் காலை நேரம் குவிந்து காணப்படுவதை யாமெல்லோரும் அறிவோம். வலம்புரி தனது பதின்மூன்றாவது வயதை மிக சிரமத்திலும் இன்னல்களிலும் கூட தனது சேவையை மிகத்திறம்பட ஆற்றி மக்களின் பாராட்டைப்பெற்றுள்ளது. மிக உண்மையான செய்திகள், அரசியல், ஆன்மீக அறிவுரைகள், விளம்பரம், கவிதைகள் போன்ற நல்ல உணர்வுள்ள அம்சங்களை உள்ளடக்கி வெளிப்படுத்தலும் முக்கிய அம்சமாக கருதப்படுவதும் போற்றுதற்குரியது.

**அன்பு ஆராய்ந்த சொல்**
**வன்மை தூது உரைப்பார்க்கு**
**இன்றியமையாத மூன்று**

என்ற பெருமைமிக்க வள்ளுவனுடைய குறளின் ஆற்றலை அறிந்து செயற்படு வதையிட்டு பெருமை அடைகின்றோம். எனவே வலம்புரியின் சேவை மேலும் விரி வடைந்து முன்னெடுக்க ஆசிரிய பீடம், சக உத்தியோகத்தர்களின் மிகநேர்மையான உணர்வுபூர்வமான சேவைகளை ஊக்குவித்து தினமும் மக்கள் கரங்களில் சேரும் வண்ணம் எல்லாம் வல்ல அம்பிகையை வணங்கி எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

*சுபமஸ்து*
*ச.மகேஸ்வரக்குருக்கள்,*
*சர்வதேச இந்துமத குரு,*
*பீடாதிபதி.*


# வலம்புரி

நடுவுநிலை தவறாமல் நன்நெறி காக்கும்
உங்கள் நாளிதழ்

# 13 ஆம்

# ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் 20.12.2012



## சைவத்தமிழ் மகிமை மங்காது காக்கும் வலம்புரி


வாசகர்களை அவர்களின் ரசனை விருப்பத்தின்பால் வழி நடத்தாது நல்லதொரு அறிவுள்ள பிரஜையாக உருவாக்க அறிவூட்டலுடன் விழிப்புணர்வுக் கருத்துகளையும் உள்ளடக்கிய தரம் மிக்க தகவல்களைத் தருவது வலம்புரி. நல்லதொரு வாசகன் வலம்புரியின் ஆசிரிய தலையங்கத்தினை வாசிக்கத் தவறிவிடமாட்டான்.

ஆசிரிய தலையங்கத்திற்கென்றே வலம்புரி பத்திரிகை வாசிக்கும் வாசகர்கள் ஏராளம். பத்திரிகை, பண்பாடு சற்றேனும் குன்றாது காணப்படுவது வலம்புரியின் சிறப்பம்சம். யாழ்ப் பாண மண்ணின் சைவத்தமிழ் மகிமை மங்காது காக்கும் காவலனாகத் திகழ்வது வலம்புரி .

கடந்த 13 ஆண்டுகாலம் ஆற்றி வந்த மகத்தான சேவைகள் அது வருங்காலத்தில் செய்யப் போகின்ற அரும் பணிகளுக்கு கட்டியம் கூறி நிற்கின்றன. உண்மை யைக் கண்டறிந்தும் சம்பவங்கள் தொடர்பாகவும் விடயங்கள் தொடர்பாகவும் நீதியானதும் பரந்துபட்டதுமான விபரத்தை வழங்கியும் அந்த நோக்கங்களை முன்னெடுத்துச் செல்வதே சிறந்த பத்திரிகையாகும்.

* நம்பகத்தன்மையுடன் சிறந்து விளங்கும் வலம்புரின் பணிகள் தொடர இந்து மத குருமார்களது ஆசீர்வாதமும் வாழ்த்துக்க ளும் உரித்தாகுக.

*சிவஸ்ரீசபா.வாசுதேவக்குருக்கள்*
*தலைவர், சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம், யாழ்ப்பாணம்.*




## தலை சிறந்த பத்திரிகையாக...

வலம்புரி நாளிதழ் பதின்மூன்றாவது ஆண்டை நிறைவு செய்துள்ளமை மிகுந்த திருப்தி தரும் செய்தியாகும். கடந்த மூன்று மாதங்கள் நான் அமெரிக்காவில் இருந்தேன். யாழ்ப்பாணத்து செய்திகளை தெளிவாகவும் விரைவாகவும் எனக்கு வலம்புரி தந்துதவி யது.

பத்திரிகைகள்தான் ஏழை மக்களின் பல்கலைக்கழகங்கள். தொண்ணூறு வீதமான பாமரமக்கள் பத்திரிகைகளை விட எதனையும் படிப்பதில்லை என்பது ஆய்வாளர்களின் முடிவு. நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் தலை சிறந்த பத்திரிகையாக வலம்புரி வளர்ச்சியடைந்துள்ளமை குறித்து யாழ். மக்கள் அனைவருமே பெருமைப்பட்டுக் கொள்ளலாம். செய்திகள் தூய்மையானவை, விமர்சனத்திற்கு கட்டுப்பாடு இல்லை (facts are sacred comment is free) என்பது மான் செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் கோட்பாடு. செய்திகளின் தூய்மையையும் விமர்சனத்தின் ஆழத்தையும் வலம்புரியில் கண்டு கொண்டுள்ளலாம்.

வலம்புரி -சங்குநாதம் தொடர்ந்தும் சார்பும் காழ்ப்புமின்றி தமிழ் மக்களுக்கு உழை க்க எனது அன்பு கனிந்த வாழ்த்துதல்கள்.

*எஸ்.ஜெபநேசன்*
*முன்னாள் பேராயர்,*
*தென்னிந்திய திருச்சபை.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு
சிறப்பு மலர் - 20.12.2012









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு
சிறப்பு மலர் - 20.12.2012




## மக்கள் மனங்களை வென்ற நம்பர்வன்



மக்கள் மனங்களை வென்ற நாளிதழ் வலம்புரி தனது ஊடக சேவையில் பதின் மூன்றாவது அகவையைப் பூர்த்தி செய்து பதின்நான்காம் ஆண்டில் காலடி பதிப்பதைக் கண்டு உள்ளம் உவகையுறுகின்றது.

பத்திரிகையை ஸ்தாபித்து இவ்வளவு குறுகிய காலத்தில் அபரிமிதமான வளர்ச்சியை கண்டு இன்று யாழ்ப்பாணத்தில் வெளிவரும் நாளிதழ்களில் நவம்பர் வன் இடத்தைப் பிடித்திருப்பதை பாராட்டாமல் இருக்கமுடியாது.

அரசியல், ஆன்மீகம், இலக்கியம், பொரு ளாதாரம், சமூகம் ஆகியவற்றிற்கு ஈடு கொடுத்து தன்னை பலப்படுத்திக் கொண்டு இன்று பதின்மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இருப்பது பெரும் சாதனை ஆகும்.


இந்து மதத்திற்கும் எமது அகில உலக சைவக் குருமார் சம்மேளனத்தின் ஆன்மீக வளர்ச்சிக் கும் கரம் கொடுத்து வரும் வலம்புரி க்கு எமது உள்ளங்கனிந்த ஆசீர்வாதங்கள். வலம்புரியின் ஊடக சேவை தொடர எல்லாம் வல்ல வல்வை மாநகரில் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அன் னையை இறைஞ்சி வேண்டி பிரார்த்தித்து எமது நல்லாசிகளை தெரிவித்து கொள்கிறோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

சிவ ஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P,
இந்து மத குருபீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்
பிரதம குரு, வல்வை ஸ்ரீ முத்து மாரி அம்மன் தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.

---

## உள்ளம் உவகையுற வாழ்த்துகின்றோம்



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் எங்கள் நாளிதழான வலம்புரி பதின்மூன்று அகவைகளைத் தாண்டித் தனது பதின் நான்காவது ஆண்டிற் காலடி பதித்து பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கைத் தமிழியல் வரலாற்றில் ஒரு தினசரியின் நீண்ட பயணமே இதுவாகும். போரின் கோரப்பிடிக்குள் சிக்கிச் சிதறிப் போன எமது சமூகத்தின் அவலங்களை, வாழ்வியற் துயரங்களை வெளிப்படுத்தும் சமூகப் பணியில் வலம்புரி பெரும் பங்காற்றி வருகின்றது.

இது உண்மையிற் பெருமைக்குரிய தர் மப்பணியாகும். சித்திபெற்ற காஞ்சிமா முனிவர் சொல்கின்றபோது பத்திரிகையாளர் களும் எழுத்தாளர்களும்தான் இன்றைய பௌராணிகர்கள் என்று குறிப்பிடுவார்.


ஆக, பழைய பௌராணிக முனிவர்கள் எப்படி மக்களை உரியவகையில் நற்செய்தி களை வழங்கி வழிப்படுத்தினார்களோ அவ் விதம் மக்களை ஆற்றுப்படுத்தத்தக்க சக்தி ஊடகத்திற்கே உரியதாக இருக்கின்றது.

இந்த வகையிற் பண்பாடு பேணுதல், கலாசார விழுமியங்களைக் கட்டியெழுப்பு தல், அநாகரிக வாழ்வியலின் அவலத்தை உணர்த்துதல், அறவாழ்வை எழுப்புதல் எனும் உயரிய நோக்கங்களை உடையதாக வலம்புரி நாளிதழ் தனித்துவமாக இயங்கி வருகின்றது.

தனிச்சிறப்புடன் பெருமையான ஊடக சக்தியாக உயர்ந்துள்ள வலம்புரி மென் மேலும் பல தசாப்தங்களைக் கண்டு வெற்றி நடைபோட வாழ்த்துகின்றோம். அதற்காக நாம் பூஜிக்கும் கந்தன் கழலடிகளைச் சிந் தித்துப் போற்றுகின்றோம்.

வாழ்க! வளர்க! வலம்புரி

கு.தியாகராஜக்குருக்கள், நீர்வைமணி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் - 20.12.2012




**வலம்புரி இணைய முகவரி:**
**www.valampurii.lk**




## ஆன்மீகத்திற்கு உன்னத மதிப்புக்கொடுக்கும் பத்திரிகை

எம்மண்ணில் வாழும் மக்களை ஆற்றுப்படுத்தும் உன்னத சேவையை வலம்புரி பத்திரிகை தன் 13ஆவது ஆண்டில் நிறை வாக ஆற்றிவருகிறது. வலம்புரி பத்திரிகைக் குரிய நிதானத்தை என்றும் பேணி தன்பணி தொடர வாழ்த்துகின்றேன். வலம்புரியில் வரும் ஆக்கபூர்வமான விடயங்கள் பலரை யும் கவர்ந்துள்ளமை உணரக்கூடியதாக உள்ளது.

ஆசிரியர் கருத்துமுதல் சகல விடயங்களும் நன்முறையில் வெளிவருவது பாராட்டுக் குரியது. ஆன்மீகத்திற்கு உன்னத மதிப்புக் கொடுக் கும் வலம்புரி எதிர்காலச் சமூகம் தொடர்பாக மேலும் நற்கருத்துக்களை வெளிப் படுத்த உதவவேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். சூரியன், சந்திரன் நிரந்தரமாக நிலை பெற்று விளங்குவதுபோல் வலம்புரி பத்தி ரிகையும் இவ்வைய கத்தில் சிறப்புற்று விளங்க துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்தி நல்லாசி கூறி அமைகிறேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## தமிழ்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற பத்திரிகை



*பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்*
*அல்லாஹ்க்கே எல்லாப்புகழும்*

வலம்புரி என்ற வளமான பெயருடன் வலம்வருகின்ற நாளிதழை தவறாமல் பார்த்துப்படிக்கின்றவனில் நானும் ஒருவன். அனைத்து மக்களும் பேதமின்றி ஒருமனதுடன் படிக்கின்ற, உள்ளதை உண்மையாக எழுதிடும் உன்னதமான பத்திரிகை 13 வயதினை நிறைவு செய்யும் இந்நாளில் மென்மேலும் நடுவுநிலை தவறாமல் நன்னெறிகாத்து இன, மதபேத மின்றி எழுதுகின்ற போக்கினைக் கடைப்பிடித்து சிறப்பான பத்திரிகை என்ற பெயரினை பெற்று தமிழ்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற வலம்புரியானுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமை யடைகின்றேன். இந்நாளிதழும் வலம்புரி குடும்பத்தினரும் மென்மேலும் பண நெடுங்காலம் வளர்ச்சியடைந்து பூமியில் நிலைத்துநிற்க வல்ல அல்லாஹ்வை வேண்டுகின்றேன்.

வஸ்ஸலாம் அல்ஹம் துலில்லாஹ்

மௌலவி எம்.மஹ்மூத் பலாஹி
யாழ்.முகம்மதியா ஜும்மா
பள்ளிவாசல், யாழ்ப்பாணம்.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் - 20.12.2012



## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி

**இருளில் வாழ்ந்த மக்கள்
பேரொளியைக் கண்டனர்.
இவ்வொளியே ஆண்டவர் இயேசு கிறிஸ்து.**

உண்மையை எடுத்துரைப்பதே இறை மகன் இயேசுவின் பணியாக இருந்தது. அநீதி களை சுட்டிக்காட்டி மக்களின் பாவ வாழ்வி லிருந்து, சமூகத்தின் பிழையான போக்குகளி லிருந்து அனைவரும் மனம் மாற வேண்டும் என்பதே அவரது பிறப்பின் நோக்கமாக அமைந்தது.

இவ்வகையில் உண்மையை சமூகத்திற்கு எடுத்துரைத்து நடுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற விருது வாக்குடன் கடந்த 13 ஆண்டு காலமாக தனது சேவையில் வெற்றியுடன் பயணித்து அதன் நிறைவை காணும் வலம்புரி- சங்குநாதம் பத்திரிகையை நானும் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். பத்திரிகைத்துறை யானது தகவல்களை மக்களுக்கு உண்மை யான முறையில் எடுத்துக் கூறவேண்டிய துறை. செய்திகளை உலகிற்கு துணிவுடன் கூறுகின்றதுறை. இத்துறையில் வலம்புரி பத்திரிகையும் தன்னை இணைத்து நற்சேவை யாற்றி 13 ஆண்டுகளாக வெற்றி நடை போட்டுள்ளது.

எனவே இம்மகிழ்வான நாளில் இப்பத் திரிகையின் வளர்ச்சியில் பங்கெடுக்கும் ஒவ் வொருவரையும் வாழ்த்தி இறை ஆசீர் வேண்டுவதில் மகிழ்வடைகின் றேன். மேலும் இந்நத்தார் காலத்தில் உங்கள் அனை வருக்கும் எனது இனிய வாழ்த்துக்க ளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*பேரருட்திரு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர், ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.*



## துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி

13ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் வலம்புரிக்கு எனது மன மார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். பல செய்தித்தாள்கள் வெளிவரும் நிலையில் உண்மையான, நடுநிலையான பொய்ப்பிர சாரங்கள் அற்ற செய்திகளை வெளியிடும் பண்பினைக்கொண்ட இந்தச் செய்தித்தாள் மேலும் தழைத்து பெருவிருட்சமாக வர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

தனது வெளியீடுகளில் பத்திரிகை தர்மத்தினை எப்பொழுதும் கடைப் பிடிக்கும் பத்திரி கையின் முதன்மை ஆசிரியர், செய்தித் தொகுப்பாளர்கள், செய்தி வழங்குநர்கள், சேகரிப்பாளர்கள் மற்றும் அனைத்து ஊழியர்களும் இப்பத்திரிகையின் பலத்தை மேலும் மேலும் உயர்த்தி மக்களிடையே பெரும் மதிப்பினைப் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

*பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.*



## முன்னாள் [illegible]வேந்தரின் வாழ்த்துச்செய்தி

வலம்புரி பத்திரிகை தனது 13 ஆவது அகவையை பூர்த்தி செய்வதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இப்பிராந்திய தினசரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பல்வேறு நெருக்கடிகள், நெருக்குவாரங்கள் மற்றும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது.

இச்சூழ்நிலைகளிலும் பத்திரிகை தர்மத்தை இறுகக் கடைப்பிடித்து சிறப்பாக பிரதேச, தேசிய, சர்வதேச செய்திகளை வெளியிட்டு வந்தது மிகவும் பாராட்டுக்குரியது. மேலும் காத்திரமான ஆசிரிய தலையங்கங்கள் மூலம் எமது சமூகத்தின் குறைகளை குறைக்கவும் அபிவிருத்தியை மேம்படுத்த வும் முயன்று வருகின்றது. இதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது எனலாம். எமது இளைஞர்களினதும் மக்களினதும் கல்வி, தொழில், வாழ்வாதார மேம்பாட்டு விடயங்க ளில் கூடிய கவனம் செலுத்தி வருவதுடன் இவர்கள் வழி தவறிப்போகாது நல்வழி காட்டுவதில் சிறப்பான பங்கு வகிக்கின்றது. யுத்தத்தாலும் அரசியலாலும் மிகவும் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களின் விடிவுக் காக உழைத்து வரும் வலம்புரி மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

*பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்.*



## ஏற்றமிகு வலம்புரியே! பல்லாண்டு வாழ்க!!

சிந்தனைக்குரிய நல்ல சிறந்த பல கட்டுரைகளும்
சீர்திருத்த வழிகாட்டும் கருத்தான கவிதைகளும்
உந்தனை அலங்கரிக்க உதயவேளை தனில் வந்த
ஊர்போற்றப் பார்போற்றக் கரங்களிலே தவழ்ந்து
எந்தனை மகிழ்விக்கும் ஏற்றமிகு வலம்புரியே!
ஏறுபோல் வீறுநடை நடந்து நலம்பல பெற்றிட
வந்தனை செய்து வாழ்த்துகின்றோம் நல்லைக் கந்தனையே
வளமோடு வாழியவே! பல்லாண்டு வாழ்க! வாழ்க!!

*சிவநெறிக்கலாநிதி, கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.*



## அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி

வாசகர்களின் மத்தியில் தினமும் வலம் வரும் வலம்புரி நாளிதழானது யாழ். மாவட் டத்தில் வெளியிடத் தொடங்கி இன்று 13 ஆண்டு களை நிறைவுசெய்து கொள்வதனையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சமூகத்திற்கு சர்வதேசத்தையே அறி முகம் செய்யும் பெருந்திறனை ஊடகத்துறை கொண்டுள்ளதுடன் சமகாலத்து நிலைமை களை எடுத்துக் காட்டுவதில் பத்திரிகைகளும் ஊடகங்களும் முன்னிலை வகிக்கின்றன. இந்த வகையில் எம் மாவட்டத்தில் முதன்மை ஊடகங் களில் ஒன்றாகத் திகழும் வலம்புரி நாளேடா னது மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கமைவாகச் சகல தரப்பி னர்களும் தேவையான பல்வேறு பட்ட செய்திகளையும் தகவல்களையும் வழங்கி வரும் பணி மகத்தானதாகும்.

காலத்தின் மாற்றத் திற்கேற்ப சமூகத்தின் தேவைகளைப் பல்வேறு துறைகளிலும் பய னுள்ள தகவல்களைத் தொகுத்தளிக்கும் திறனி னாலேயே பத்திரிகைகள் மக்கள் மத்தியில் நிலை பெறுகின்றன.

இவ்வாறு மக்களின் அன்றாட வாழ்வுடன் ஒன்றிணைந்து தினசரி வலம்வரும் வலம்புரி பத்திரிகையானது சமுதாயத்தின் தேவைய றிந்து இன்றுபோல் என்றும் நடுவுநிலை தவறாது நன்னெறி காத்து பத்திரிகா தர்மத்தின் வழியில் உண்மையான, நேர்மையான செய்தி களை வழங்கிச் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வும் தன்பணியில் மென்மேலும் வளர்ச்சி கண்டு சிறந்து நிற்கவும் எனது நல்லாசிகளை யும் மனமுவந்த வாழ் த்துக்களையும் தெரி வித்துக் கொள்கின்றேன்.

*சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலர் யாழ்.மாவட்டம்.*













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் - 20.12.2012

வலம்புரியே...! வாழ்க பல்லாண்டு...
தொடர்க உன் மக்கள் சேவை

சகல பாமசி & குறோசறீஸ் பொருட்களையும், குளோன் வகைகளையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள

**றூபா பன் முக வர்த்தகம்**

இல:104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.T.P:- 021 222 2479





எட்டுத்திக்கெங்கும் வலம்வரும்
வலம்புரிக்கு எமது வாழ்த்துக்கள்



**Asoka Jewelers**

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

**அசோகா நகையகம்**

இல.111 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6290

வாசகர் இதயங்களைக் கொள்ளைகொண்ட வலம்புரியே...! உன் பணிதொடர வாழ்த்துக்கள்



**V.S.P**

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

VSP 1969

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0212224135, 0212229165


MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

புதிய ஆண்டில் மேலும்
உன் பணி பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்

**ராம்கோ சீமெந்து**

**RAMCO CEMENT**

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!



ஆசியாவின் முதலாம்
தர(நம்பர்-1)
தொழிற்சாலையாக தெரிவு
செய்யப்பட்ட RAMCO
சீமெந்து (கோபுரமார்க்)
என்பதை
மக்களுக்கு மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

- இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்


**ஈஸ்வர பகவான் அன் கம்பனி**

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 7603, 021 222 2350

மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த வலம்புரியின்
பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துக்கள்!

**HOLCIM CEMENT**





**Authorized Dealer Prima Ceylon (PVT) Ltd.**

யாழ். மண்ணில் பிறிமா உற்பத்திகளின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்

Jaffna District Batas
SRI RANGAN ENTERPRISES
370, Hospital Road, Jaffna.

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

**ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்**

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 021 222 2027

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியே..!.புதிய ஆண்டில் உன் பணி புத்தொளி வீசட்டும்

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு?
நீங்கள் துல்லியமான பார்வையைப் பெற்றிட,
பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட
உறுதியான, அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிட-
இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய
அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட



எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

கிளைகள்:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

இல.91, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.

கட்டுப் பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு

வாழ்க வலம்புரி! வளர்க உன்பணி!!



ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

ஆர். வி.ஜி
மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

R.V.G
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021222 6806

வலம்புரி 13 ஆம் ஆண்டு நிறைவு சிறப்பு மலர் - 20.12.2012

புதிய ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரியே..! பார் எங்கும் உன் புகழ் பரவ வாழ்த்துகின்றோம்

BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

O/L பரீட்சை எழுதிய மாணவர்களினது நன்மை கருதியும், வருகின்ற புத்தாண்டு 2013 இற்காகவும் விசேட கட்டணக் கழிவில் சர்வதேச தரம் கொண்ட கற்கைநெறிகள்

இன்னும் சில மாதங்களில் நீங்கள் உயர்தரத்திற்குச் செல்லலாம், படித்துப் பட்டதாரி ஆகலாம், வேறு சிலர் தொழிற்சந்தையிலே நல்ல வேலைவாய்ப்பைத் தேடலாம் அல்லது வேறு உயர் கற்கைநெறிகளைக்கற்று நீங்கள் வாழ்க்கையை முன்னேற்ற விரும்பலாம். ஆனால் இக் கனவையெல்லாம் நீங்கள் நனவாக்க வேண்டுமானால் தற்போதைய காலகட்டத்திலே ஆங்கில அறிவு மிக மிக அவசியமானது.

Spoken English With Grammar - Quick Learning Course

Duration: (1 1/2 Months)

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம்.
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது. ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Diploma In English

Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர்கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி, Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களைப் பாவிப்பதிலும்சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம். ஏற்கனவே Spoken English with Grammar படித்தவர்களும் ஓரளவிற்கு ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு உள்ளவர்களும், ஆங்கிலத்தில் தங்களை மேலும் வலுவூட்ட விரும்புபவர்களுக்குமான உகந்த கற்கைநெறி.

B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

Duration: (2 Months)

IELTS Academic / General

Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We guarantee success rate 6.5 band and above

A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

- UK அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும்.
- சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை.
- ஏனைய பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானது.
- 2013 July இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்குமுன் உங்களைப் பதிவு செய்யுங்கள்.

Duration: (2 Months)

Young Learners for English (YLE) (வயதெல்லை : 7 - 12)

பாடசாலை மாணவர்களின் எதிர்கால வாழ்வை பிரகாசப்படுத்தும் ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் ஒரு சர்வதேசத் தரம் கொண்ட சான்றிதழ்.

Batches Starting on

02.01.2013 @ 9.00 a.m.
05.01.2013 @ 8.00 a.m.
07.01.2013 @ 9.00 a.m.
04.01.2013 @ 9.00 a.m.
12.01.2013 @ 8.00 a.m.

Head Office: No. 30, 1/5, W.A. De Silva Mawatha, Colombo - 06. Tel: 011 250 0207
No. 15, 2/1, Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna. Tel: 021 222 4550
Wesley High School Road (Opposite Methodist Church), Kalmunai. Tel: 067 222 6000
No. 3, 6th Lane, Vairavarkovil Road, Vairavapuliyankulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 077 758 5913, 077 722 2422 , 071 429 9935, 077 773 0074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரி 13ஆம் ஆண்டு நிறைவு

சிறப்பு மலர் - 20.12.2012


MMBL Money Master
Company Registration No.986
WESTERN UNION

மக்கள் பணியே மகேசன் பணி என தொடரும்
வலம்புரிக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது நத்தார் புதுவருட
வாழ்த்துக்களும் உரித்தாகுக.

வவுனியா, புதுக்குடியிருப்பைத் தொடர்ந்து
கிளிநொச்சியிலும் சிறப்பான சேவையாற்றிக்கொண்டிருக்கிறது

கோபி ஏஜென்சி

வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும்
வெஸ்டர்ன் யூனியன்மூலம் உலகெங்கும்
இருந்து அனுப்பும் பணத்தினை
ஒரு சில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில்
பெற்றுக்கொள்ளலாம். வெஸ்டர்ன் யூனியனால்
அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது
கிளிநொச்சி மற்றும்
அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!











நம்பிக்கை..! நாணயம்...!! பாதுகாப்பு...!!!

## கோபி ஏஜென்சி

இல. 355, A9 வீதி, கிளிநொச்சி (கிளிநொச்சி கந்தசாமி கோவில் அருகாமை)

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப் பரிமாற்றம் சேவையினை வழங்கி வருகின்றோம்
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினை பெற்று வீடு செல்லலாம்
- விடுமுறை நாட்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:**
**021 2283999**, Fax **0212283998**

**அலுவலக நேரம்:**
**திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை**

## கோபி ஏஜென்சி

**தலைமைக்காரியாலயம்**
33, மில் வீதி, வவுனியா.
0242225888 / 0242222411
(365 நாட்களும் திறந்திருக்கும்)

**கிளைக்காரியாலயம்**
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி,
புதுக்குடியிருப்பு
0243248979, 0777343300

வெஸ்ரேண் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி ட்ரான்ஸ்பர் பிறைவேட் லிமிட்டெட், 7ஆம் மாடி, எய்க்கென் ஸ்பென்ஸ் டவர் II, இல. 315, வொக்சோல் வீதி, கொழும்பு-02. உடனடி அழைப்பிற்கு 0115529999


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org